# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

மார்ச் 2008 ஜீவியம் 13 மலர் 11

*இம்மாத மலரில். . . .*

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி | 2 |
| லைப் டிவைன் | 3 |
| பின்தொடரும் வெற்றியின் அறிகுறி | 18 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 21 |
| சாவித்ரி | 23 |
| ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள் | 25 |
| அன்பர் கடிதம் | 28 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 29 |
| முன்னேற்றம் தரக்கூடிய சாதனை | 34 |
| லைப் டிவைன் - கருத்து | 40 |
| எந்தையும் தாயும் | 42 |
| யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள் | 60 |
| அஜெண்டா | 63 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

✡ மனிதன் தான் எழுப்ப வேண்டிய கேள்வியை இன்னமும் எழுப்பவில்லை. கேள்வி எழுப்பும் முன் கொடுத்த பதில் ஸ்ரீ அரவிந்தம்.

✡ நாம் அன்னையை ஏற்றுக் கொள்ளும்பட்சத்தில் அன்னை நமக்குள்ளிருந்து நமக்கு எது நல்லதோ அதைச் செய்வார். நாம் நம்மை ஒதுக்கினால் அவரால் செயல்பட முடியும்.

ஆத்மாவின் இதமான அரவணைப்புக்கு அன்பு எனப் பெயர்.

## இம்மாதச் செய்தி

எவரிடமும் சொல்ல முடியாத

மனநிலை சாதிக்கும்.





# லைப் டிவைன்

கர்மயோகி

## XVI. The Triple Status of Supermind

This part of the book, the chapters on Supermind and Maya describe the process of creation. The process extends to the chapter on *The Divine Soul*. They cover the chapters from 13 to 17. In an important sense the central secret of His yoga is there. **That process of creation is again seen explained in the creation of *Matter* in chapter 24, creation of *Life* in chapter 19. Also in chapter 18 where he explains how Mind came into existence we find the same rules**. In our own life we can observe that process in any act of ours or the release of emotion or sensation. Even when a thought generates it can be seen. Interestingly one can observe it when Silence, insight, intuition or integral Experience is created. In the chapter on Cosmic Determinants He speaks of the infinite Self-conception, the creation of form that compresses the force into it. Again, later in that chapter *He* speaks of the complete process of creation in brief. In further pages He explains the generation of Truths and Powers of the infinite Being, their becoming the Spiritual determinants, their splitting into three parts of Known, Knowledge and Knower, how they are one in Supermind and separate in Mind. The sixth ignorance, the constitutional ignorance is created, *He* says, by taking one or some or all the parts of being but ignoring their subtle, occult parts that determine the outcome. That is one part of the essential knowledge of the process. Each of the seven ignorances can thus be

understood. In the chapter on Vedantic Knowledge *He* explains the process of Reason becoming intuition by shedding the impact of the senses. That is one aspect of the Process. We can say each of the 56 chapters gives us one aspect of that Process or even declare that the 1450 paras each contribute one law, one truth, one truism, one aspect of it or one strategy of it. Let me recall those points for the chapters 13 to 18.

❊ The Being creates of itself in itself active ordered truths out of the static essential truths by its capacity of self-conception and self-limitation.

❊ The Supermind creates by the Real-idea which is a vibration of the Being.

❊ The Supermind itself is created when the Absolute changes into Sachchidananda. It creates by converting the equable concentration into unequal concentration.

❊ The apprehending Supermind by objectivity creates the lower triplicity first taking three poises to support God, Jivatma and ego.

❊ Man located in Mind rises to the Divine Soul located in the comprehending Supermind in the process of ascent.

❊ **As the Supermind was created when the Absolute became Sachchidananda, Mind is created when the Supermind divided itself into the Timeless comprehending Supermind and the apprehending Supermind in Time.**

The above perspective when real helps us to grasp the arguments of this chapter which when taken in the greatest detail in sequence will reveal the logic of the composition of this chapter. Let me give them in as great a detail as possible.

1) Before taking up the chapter let us know what we have realised of Ishwara, the Comprehending Supermind.



2) **The Ishwara develops the world by His Maya out of the concentrated unity of His being.**

3) Our beginning was all existence in one Being.

   ❊ The Nature of this Being is consciousness and Delight.

   ❊ Concentrated it possesses the Delight, active it becomes the play of existence, consciousness and will.

   ❊ Our Atman, the essential being enjoys this play which we in ignorance have forfeited.

4) Assertion of unity on the one hand leads us to the inevitable conclusion that we must either choose this world of ignorance or the higher world of Bliss.

5) The existence of the intermediate link, the Supermind enables us to unite the high and the lower.

   ❊ The reconciliation is explained by the Law of Causality, the Divine Law that explains the relation of Time with Space.

   ❊ That which so develops the movements of Time into the objects of Space is Knowledge-Will or Consciousness-Force. **Mind loses the unity in this process while Supermind retains it.**

6) Sachchidananda proceeding out of its primal poise into a movement is the instrument of cosmic creation.

   ❊ The movement is the form of Energy and instrument of cosmic creation.

   ❊ Sachchidananda proceeding upon it as a base and in it as a continent is its form of Energy and instrument as cosmic creation.

   ❊ Consciousness and Force are those aspects of Power of existence.

- ❊ Knowledge and Will are the form of that Power.
- ❊ It creates the relations in the extensions of Time and Space.
- ❊ **The Supermind is the Being moving out into a determinative self-knowledge which wills to realise in Time and Space the truths it perceived in itself.** It does so in its timeless, spaceless extension.
- ❊ It is self-knowledge, Truth-Consciousness, Real-idea and self-force.

7) Definition of God; The Being who creates all things in itself and governs their evolution by its self-knowledge, His omniscience, omnipotence and omnipresence. The Wills clash in life; the Supermind sees it as a harmony.

8) The Supermind takes three poises – God, Jivatma and the Ego.

9) The first poise is that of the Comprehending Supermind of Timeless dimension. It is God that has the Many in the One and the One in the Many in potential.

10) The second poise is the One Jivatma that expresses the Many out of the One.

11) The third poise is the diversified individuality in ignorance – the ego.

12) A further lapse will create Avidya. In truth the fullness of the joy of unity needs the joy of differentiation.

13) These three poises are three different ways of dealing with the same Truth. There is no priority in Time, but priority may be assigned to relation of consciousness. **The eternity of Timelessness only expresses in Time as eternity of recurrence in Time.**

14) As we affirm the absoluteness of the Absolute, the vain distinctions



created by the Mind do not concern us.

**PAGE 142 / PARA 1:**

The apprehending Truth-Consciousness explains the world we inhabit. It is easier to understand. It is the view of the individual soul liberated. It is freed from the mentality and its limitations. It is then admitted to participate in the action of the Divine Supermind. Before that we need to know of the Ishwara. Ishwara is the consciousness of the Lord. He develops the world by His Maya. He does so by his creative capacity. It is done by the original concentrated unity of His being. It is better we know that.

**PAGE 142 / PARA 2:**

To us all existence is one Being. Its essential nature is Consciousness. Its active nature is Force or Will. And this Being is Delight. This Consciousness is delight. This Force or Will is Delight. This is God. This is ourselves in our essential Being. We can call it our non-phenomenal Being. It is Eternal. It is inalienable Bliss of Existence. It is Bliss of Consciousness. It is Bliss of Force or Will. It is concentrated in itself and is at rest. It is also active and creative. When it is concentrated it possesses the inalienable Bliss. Rather it is the essential, eternal Bliss. Active and creative it possesses the play. Or rather it becomes the play. It becomes the delight of the play. It is the play of existence. It is the play of the consciousness. It is the play of the force and will. That play is the universe. That delight is the sole cause of cosmic existence. It is the motive and objective. The Divine Consciousness possesses that play and delight eternally and inalienably. Our essential being also enjoys that play and delight eternally and inalienably. It is our real self. It is concealed from us by our false self which is our ego. It is mental ego. It cannot do otherwise since it is one in being with the Divine Consciousness. We aspire to a divine life. We cannot attain to it by any other way than unveiling the real self. For that we have to mount from our present status in the false ego to a higher status in the true self. The true self is the Atman. It can be done by entering into that unity with the Divine Consciousness. It is

something superconscient to us. Otherwise we could not exist. Our conscious mentality has forfeited the Divine Consciousness.

**PAGE 143 / PARA 3:**

We assert the unity of Sachchidananda on the one hand. On the other hand we assert the divided mentality. Thus we posit two opposite entities. One of them must be false if the other is held true. One of which must be abolished if the other is to be enjoyed. We exist on earth in mind, life and body. If we must abolish the consciousness of mind, life and body in order to reach Existence, Consciousness and Bliss, then a divine life on earth is impossible. We want to enjoy the Transcendent. We must re-become It. For that we must abandon cosmic existence utterly as an illusion. From this solution there is no escape. It is possible if there is an intermediate link between the two. That can explain each to the other. It can establish between them a relation. It will make it possible for us to realise the one Existence, Consciousness, Delight in the mould of the mind, life and body.

**PAGE 143 / PARA 4:**

The intermediate link exists. We call it the Supermind or the Truth-Consciousness. It is a principle superior to mentality. It exists, acts and proceeds in the fundamental truth and unity of things. The mind exists, acts and proceeds in the appearances and phenomenal divisions. We have started with a position. That position demands the existence of the Supermind. It is a logical necessity. Sachchidananda is spaceless, timeless. It is an absolute conscious existence that is bliss. But the world is, on the contrary, an extension in Time and Space. It is a movement. It is a working out, it is a development of relations and possibilities by causality in Time and Space. Or, it so appears to us. The true name of this Causality is Divine Law. The essence of that Law is a development of the truth. It is an inevitable development of the idea. It is in the very essence of what is developed. There is an infinite possibility. Out of that stuff relative movements arise. It is a previously fixed determination of that movement. That which thus develops all things must be a Knowledge-Will. It is a Conscious-Force. All



manifestations of universe is a play of the Consciousness-Force. It is the essential nature of existence. But the developing Knowledge-Will is not mental. For mind does not know that Law. Nor does it possess or govern this Law. But it is governed by it. It is one with its results. It moves in the phenomena of the self-development. But it is not at its root. Mind observes as divided things the results of the development. It strives in vain to arrive at the source and reality. Moreover this Knowledge-Will which develops all must be in possession of unity of things. It must manifest its multiplicity out of it. But mind is not in possession of this unity. It has only an imperfect possession of part of the multiplicity.

Let us consider an analogy. There are decisions to be taken in the family or in the local town. The power structure of the family attempts to perpetuate itself and decides accordingly. When the decision is just, it opens into a similar structure of the neighbourhood or village. **Neither the family nor the neighbourhood knows these possibilities have originated in the wider society and ultimately in the aspirations of humanity**. When the local decisions are in tune with the higher order of things the lowest decision opens out into the highest possibility. When they are in conflict, the victim has the option to submit to it or approach a higher level of realities. Mind is analogous to the lower order of things. Supermind belongs to the highest order of things. Humanity creates freedom. Society converts it into democracy. Administration makes it into higher modern education and modern political possibilities. So also about the genius and the Supramental Being. Mind has no knowledge of these higher aspects. It is an instrument of lower creation. It is not the creatrix of the original powers. Man has the option to honour the compulsions of the Mind or the possibilities of the Supermind.

**PAGE 144 / PARA 5:**

Therefore there must be a principle superior to the Mind which satisfies the conditions in which Mind fails. No doubt, Sachchidananda itself is this principle. But it is not Sachchidananda resting in its pure

infinite invariable consciousness. It is Sachchidananda proceeding out of its primal poise. But it is rather the Sachchidananda proceeding upon its primal poise as a base. It does so in the primal base as a continent. It proceeds into a movement. The movement is its form of Energy. And it is the instrument of cosmic creation. Consciousness and Force are the twin essential aspects of the pure Power of existence. Knowledge and Will must therefore be the form which that Power takes in creating a world. It is a world of relations in the extension of Time and Space. This Knowledge and this Will must be one. It must be infinite, all-embracing, all possessing. It holds eternally itself that which it casts into form. **Then the Supermind must be the Being moving out into the determinative self-knowledge**. It perceives certain truths of itself and wills to realise them in a temporal and spatial extension of its own timeless spaceless existence. Whatever is in its own being takes form as self-knowledge. It is Truth-Consciousness, Real-Idea. And that self-knowledge is also self-force. It fulfills or realises itself inevitably in Time and Space.

**PAGE 144 / PARA 6:**

This then is the nature of the Divine Consciousness. It creates in itself all things by a movement of its conscious-force. It governs their development through a self-evolution. It is done by an inherent Knowledge-Will of the truth of existence. It is the real-idea which has formed them. The Being that is thus conscient is what we call God. He must obviously be omnipresent, omniscient, omnipotent. All forms are forms of His conscious being. They are created by its force of movement. It is done in its own extension as Space and Time. Therefore it is omnipresent. All things exist in His conscious being. They are formed by it and possessed by it. Hence it is omniscient. This all-possessing consciousness is also an all-possessing Force. It is also an all-informing Will. Therefore it is omnipotent. This Will and Knowledge are not at war with each other. Our Will and Knowledge are capable of that disharmony. They are not at war because they are not different. They are one movement of the same being. Nor can they be contradicted by any other will, force or consciousness from outside or within. For there



is no consciousness or force external to the One. All energies and formations of Knowledge within are not other than that. They are merely the play of one all-determining Will. They are the play of the one all-harmonising Knowledge. We dwell in the particular and the divided. We cannot see the whole. Therefore we see the clash of Wills and forces. The totality of things are eternally subject to the gaze of the Supermind. The Supermind envisages them as elements of a predetermined harmony which is always present. To it they are the conspiring elements.

**PAGE 145 / PARA 7:**

Supermind can take any poise or any form. Still, Supermind will remain the nature of the divine Consciousness. But, its existence is absolute in itself. Therefore its power of existence is also absolute in its extension. Therefore the Supermind is not limited to one poise or one form of action. A state government officer is limited to the department. He cannot go out of that department. An IAS officer is not thus limited to one department. Mind is like the state government officer while Supermind is like the IAS officer. We are human beings. We are phenomenal. Therefore we are limited to a particular form or poise. We are subject to Time and Space. We can only be in our surface consciousness. We know only that. It knows one thing at a time, one formation, one poise of being, one aggregate of experience. And that one thing is the truth of ourselves which we acknowledge. All the rest is either not true, or no longer true. They have disappeared into the past of our ken. They are not yet true. It is waiting in the future and not yet in our view. But the Divine Consciousness is not thus particularised, not so limited. It can be many things at a time. It can take more than one enduring poise for all time. We find in the principle of Supermind itself there are three poises. They are general poises or statuses of the world-founding consciousness. The first founds the inalienable unity of things. The second modifies that unity. It supports the manifestation of the Many in One and One in Many. The third further modifies it so as to support the ego. Ego is the evolution of a diversified individuality. It acts in ignorance. At a lower level it becomes the illusion of the separate ego.

**PAGE 146 / PARA 8:**

The first and primary poise of the Supermind founds the inalienable unity of things. We have seen what its nature is. It is not the pure unitarian consciousness. It is Sachchidananda, timeless, spaceless. There the Conscious-Force does not cast itself out in any kind of extension. It may contain the universe. If it does, it is in eternal potentiality not in any temporal actuality. This, on the contrary, is an equal self-extension of Sachchidananda. It is all-comprehending, all-possessing, all-constituting. But, this all is one, not the many. There is no individualisation. This is the comprehending Supermind. Our self is purified and stilled. We lose all our individuality and its sense when the reflection of this Supermind falls on us. For there is no concentration of consciousness there to support an individual development. All is developed in unity as one. All is held by this Divine Consciousness as forms of its existence. They are not there in any degree of separate existences. It is like somewhat as thoughts and images are separate existences in us. They are forms taken by our consciousness. So, all are names and forms to this primary Supermind. It is the pure divine ideation and formation in the infinite. It is an ideation and formation organised as a real play of the conscious being. It is not an unreal play of mental thought. The divine Soul is in this poise. It would make no difference between Conscious-Soul and Force-Soul. All force would be action of consciousness. It makes no difference between Matter and Spirit. All mould would be simply forms of Spirit.

**PAGA 146 / PARA 9:**

The Supermind has a second poise. Here the Divine Consciousness stands back in the idea from the movement. The idea contains the movement. It realises the movement by a sort of apprehending consciousness. It follows it, occupies it and inhabits its works. It seems to distribute itself in its forms. In each name and form it would realise itself as the stable Conscious-Self. It follows and supports the individual play of movement. It upholds the differentiation from other play of movement. It is the same everywhere in soul-essence. But



it varies in soul-form. This concentration supporting the form of the soul would be the individual Divine or Jivatman. It is not the universal Divine or one all-constituting self. There would be no essential difference, but only a practical differentiation. It is necessary for the play. It would not abrogate the real unity. The universal Divine would know all soul-forms as itself and yet establish a different relation with each separately and in each with all the others. The individual Divine would envisage its existence as a soul-form and soul-movement of the One. By the comprehending action of the consciousness it would enjoy its unity with the One and with all soul-forms. It has a forward or frontal action. It is an apprehending action. By that it supports and enjoys its individual movement and its relations. It is a free difference in unity both with the One and with all its forms. This is the secondary poise of Supermind. Our purified mind can reflect this poise. Then our soul could support and occupy its individual existence. Even there it can realise itself as the One that has become all. It inhabits all, contains all, enjoys even in its particular modification its unity with God and its fellows. In no other circumstance of the supramental existence would there be any characteristic change. The only change would be this play of the One. The one has manifested its multiplicity and of the Many that are still one. It does so with all that is necessary to maintain and conduct the play.

**PAGE 147 / PARA 10:**

There is a third poise of the Supermind. It is attained by the supporting concentration projecting itself into the movement instead of standing back. Now it stands back of the movement. It inhabits it with a certain superiority to it and follows and enjoys. Projecting into the movement to be in a way involved in it, it creates the third poise. Here the character of the play would be altered. It is done only to an extent. There the individual Divine would make the play the practical field of its conscious experience. Here the realisation of utter unity with them would be only a supreme accompaniment and constant culmination of all experience. It would do so predominantly of the relations with the universal and with its other forms. In the higher poise

the unity would be the dominant and the fundamental experience. And it would be a variation which is a play of the unity. This is the tertiary poise. It would be a sort of fundamental blissful dualism in unity. It would no longer be unity qualified by a subordinate dualism between the individual Divine and its universal source. It has a consequence. It would accrue from the maintenance and operation of such a dualism.

**PAGE 148 / PARA 11:**

We may assume a first consequence. It would be a lapse into the ignorance of Avidya. It would take the Many for the real fact of existence. It may view the One only as a cosmic sum of the Many. But such a lapse is not inevitable. For the individual Divine would be conscious of itself as the result of the One. It will be aware of its power of self-creation. It is to be conscious of its multiple self-concentration. It is conceived as governing its manifold existence in the extension of Time and Space. It enjoys it manifoldly. This is the true spiritual individual. He would not arrogate to himself an independent or separate existence. It would affirm only a higher truth. It is the truth of the differentiating movement with the truth of the stable unity. **It is directly parallel to family and the house. When a son or a daughter goes out of the house he does not go out of the family**. In fact the affection increases by the distance. They are regarded as the upper and lower poles of the same truth. They are the foundation and culmination of the same play. It is the divine play. It would insist on the joy of differentiation as necessary to the fullness of the joy of the unity.

**PAGE 148 / PARA 12:**

Obviously, these three poises would be only different ways of dealing with the same Truth. The Truth of existence enjoyed would be the same. What differs is the way of enjoying of it, rather the poise of the soul enjoying it differs. One enjoys an outdoor game as well as an indoor game. Both are enjoying the same life. He enjoys travel also. That too is enjoyment. The delight, the Ananda would vary. But it would always abide within the status of the Truth-Consciousness. It involves no lapse into falsehood or the ignorance. The primary



Supermind holds something in terms of the divine unity. The secondary and tertiary Supermind would only develop that. It would apply that in terms of the divine multiplicity. We cannot stamp any of these three poises with the stigma of falsehood and illusion. The Upanishads are the ancient supreme authority for these truths of a higher experience. They speak of the Divine existence which is manifesting itself. Their language implies validity to all these three experiences. We can only assert the priority of oneness to multiplicity. It is a priority in consciousness, not in Time. Vedantic philosophy does not deny this priority or this dependence of the Many on the One. In Time the Many seem not to be eternal but to manifest out of the One. And the Many return to the One. It does so because the One is the essence of the Many. The reality of the Many is denied for this appearance. But there is another reason. There is the fact of the eternal persistence of the Many. It is the eternal recurrence of the manifestation in Time. It is a proof that the divine multiplicity is an eternal fact of the Supreme beyond Time. It is no less true than the divine unity. Otherwise it could have this characteristic of inevitable eternal recurrence in Time.

**PAGE 149 / PARA 13:**

Human mentality lay exclusive emphasis on one side of spiritual experience. It affirms that to be the sole eternal truth. It states it in terms of the all-dividing mental logic. It is thus the mutually destructive schools of philosophy arose. One school emphasises the unitarian consciousness. There the play of the divine unity is observed. Our mentality erroneously renders it in terms of real difference. We must correct this error of mind by the truth of a higher principle. Instead, we assert that the play itself is an illusion. Again we emphasise the play of difference. We assert the Supreme and the human soul are eternally different. We reject the experience that exceeds this difference and abolishes it. Now we have taken a firm position. It absolves us from the necessity of these negations. They are exclusions. We see that there is a truth behind all these affirmations. At the same time we are aware of an excess which leads to an ill-founded negation. We affirm the absolute absoluteness of That. Therefore we are not limited by the ideas of unity.

Nor are we limited by the ideas of multiplicity. We affirm the unity as the basis of manifestation of the multiplicity. We also affirm the multiplicity is the basis for the return to oneness. It offers us the enjoyment of unity in the divine manifestation. We need not burden our present statement with these discussions. We need not undertake the vain labour of enslaving our absolute freedom of the Divine infinite to the distinctions mind creates or the definitions it offers.

**IDEAS IN EACH PARA:**

**142/1:** Before appreciating the lower triplicity created by the apprehending Supermind, let us know what we have realised of the Ishwara.

**142/2:** Divine Life is the expression of the Divine Consciousness in the Lower triplicity.

**143/3:** In the absence of an intermediate link between Sachchidananda and our world, we must abandon the hope of a divine life.

**143/4:** Mind is not in possession of the Knowledge-Will or Consciousness-Force that creates all things on earth. It is in the possession of the latter.

**144/5:** Supermind is Being moving to be the determinative self-knowledge. It is Real-idea, Truth-Consciousness.

**144/6:** What is clash of Wills to the Mind, is a harmonious whole to the Supermind.

**145/7:** The poises Supermind can take are endless. It takes particularly three poises, supporting Unity, Unity in Multiplicity and the diversified individuality in ignorance.

**145/8:** The comprehending Supermind contains the universe in eternal potentiality. There is no individualisation. The divine soul in this poise will see no difference between Matter and Spirit. This is the First Poise.



**146/9:** In the second poise the Supermind upholds the One in the Many and the Many in the One.

**147/10:** The third poise supports the diversified individuality in ignorance – the ego.

**148/11:** The lapse into the ego need not create a separate existence but will add to the fullness of the joy of unity on the strength of differentiation.

**148/12:** None of these three poises need create illusion or falsehood. The eternal recurrence in Time ensures its divine unity.

**149/13:** We affirm not any one of these three poises, as the human mentality does, to create difference or exclusivity. We affirm the absolute absoluteness and accept all the three poises.

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உண்மையின் அடிப்படையில் எதிர்பார்ப்பது நம்பிக்கை. ஆசையின் அடிப்படையில் எதிர்பார்ப்பது மூடநம்பிக்கை. (உ.ம்.) புத்திசாலி மாணவனுக்கு 23% மார்க் வந்தால், அதை மீண்டும் சோதனை செய்ய விண்ணப்பித்தால் மார்க் 83% என்று வருகிறது. மக்கு அதே சோதனையைச் செய்தால் 23% ஊர்ஜிதமாகும்.

***உண்மைக்கு நம்பிக்கை; ஆசைக்கு மூடநம்பிக்கை.***

# பின்தொடரும் வெற்றியின் அறிகுறி

N. அசோகன்

வெற்றியும், தோல்வியும் வாழ்க்கையிலுள்ள பல இரட்டைகளில் முக்கியமானவை. ‘எப்பொழுதுமே தோல்வியைக் கண்டதில்லை’ என்று எவருமே கூற முடியாது. அதே சமயத்தில் ‘தோல்வியைத் தவிர வேறெதையும் சந்தித்ததில்லை’ என்று எவரும் சொல்ல முடியாது. வெற்றி-தோல்வியின் விகிதங்கள் மாறுபடலாமேயொழிய இரண்டும் எவர் வாழ்க்கையிலும் கலந்துதானிருக்கும். வெற்றி அதிகமாகவும், தோல்வி குறைவாகவும் இருக்க வேண்டுமென்றுதான் விரும்புவோம்.

வாழ்க்கையில் நம் நிலை உயர, உயர நம்மைக் கட்டுப்படுத்தும் சட்டங்களும் அந்த அளவுக்கு மாறுகின்றன. அரசாங்க ஊழியர்களுக்கு ஆண்டில் சில நாள்கள் casual leave என்று கொடுக்கப்படுகிறது. அமைச்சரவையில் அமைச்சராகச் சேரும்பொழுது வேலை நாள்களைப் பற்றிய சட்டம் மாறுகிறது. அமைச்சர் தம்முடைய வேலையின் தேவைக்கேற்ப நாள்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். ஏழைகளுக்குக் கடன் கொடுக்கின்ற வங்கி, பணக்காரர்களிடமிருந்து டெபாசிட் தேடுகிறது. வாழ்க்கையின் தரம் உயரும்பொழுது தேவைகளும், சூழ்நிலைகளும் மாறுகின்றன.

மாறுபாடு கொண்டுள்ள இருவர் நீதிமன்றத்திற்குச் செல்லும் பொழுது ஒருவர் வெல்வதும், அடுத்தவர் தோற்பதும் தவிர்க்க முடியாதவை. ஆனால் தீர்ப்புக் கூறும் நீதிபதிக்கோ வெற்றியோ, தோல்வியோ இல்லை. அவருடைய கடமை, தம்மிடம் வந்துள்ள வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவதே.

வாழ்க்கை நிலைகளை நாம் கீழ்நிலை, சராசரி நிலை மற்றும் உயர்நிலைஎன்று மூன்று விதமாகப் பிரிக்கலாம். சராசரிக்குக் கீழ்நிலையில் வெற்றி, தோல்வி இரண்டுமே கலந்திருக்கும். சராசரிக்கு மேல்நிலையில் தோல்வி என்பதில்லை. அங்கே சிறிய வெற்றியிலிருந்து



பெரிய வெற்றிக்குப் போவதுஎன்பது மட்டுமே இருக்கிறது.

ஆன்மசக்தியைக் கண்டுபிடித்துவிட்டவர்கள் மேற்கண்ட வாழ்க்கை நிலைக்குச் செல்கிறார்கள். இந்நிலைக்குச் சென்று விட்டவர்களுக்குத் தோல்விஎன்பது பின்னால் வருகின்ற பெரு வெற்றியைக் காட்டுகிறது.

- ஒரு பொருளுக்கான விநியோக உரிமையைப் பெற முடியாதவர் அப்பொருளைத் தயாரிக்கும் கம்பெனியிலேயே டைரக்டராகச் சேர்ந்தார்.
- மூன்று வங்கிகளில் எழுத்தர் வேலைக்கு நிராகரிக்கப்பட்டவர், அவற்றைவிட, பெரிய வங்கியில் அதிகாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ரூ.25,000 கடன் கேட்டு வந்த மனுவை உள்ளூர் நிலவுடைமை வங்கி ஏற்கத் தயக்கம் காட்டியது. அதன் பின்னர் தேசியமயம் ஆக்கப்பட்ட ஒரு பெரிய வங்கி அதே மனுவை ஏற்று ரூ.1,50,000 கடன் வழங்க முன்வந்தது.

இது எப்படிச் சாத்தியமாகிறதுஎன்று கேட்கலாம். ஒரு போட்டியில் தோற்பவர், மற்றவர் முந்திக்கொண்டு போவதைப் பார்க்கிறார். முன்னால் போகின்றவர்களைச் சென்றடைய வேண்டும் என்றால், பின்தங்கியவர் அவர்களைவிட அதிக வேகமாகச் செயல்பட வேண்டும். அவர்களை எட்டிவிட்ட பிறகும் அதே வேகத்தைக் கடைப்பிடித்தார் என்றால், அவர்களைத் தாண்டியும் செல்கிறார். இத்தகைய வாய்ப்பை உணர்த்துவதற்காக வாழ்க்கை சிலரைக் கீழே தள்ளுகிறது. இத்தகைய உண்மையை அறிந்தவர்கள், வாழ்க்கை கீழே தள்ளுவதற்கு முன்பே விழித்துக்கொள்ளுகிறார்கள். இப்படி விழித்துக்கொள்பவர்களைப் பாராட்டி, வாழ்க்கை அவர்களுக்குப் பெரிய பரிசைத் தருகிறது. நம்முடைய விழிப்புணர்வு அதிகரிக்கும் வரையில் வாழ்க்கை காத்திருக்கிறது. அந்த விழிப்பு வாராவிட்டால் ஒரு தோல்வியைத் தந்து, அவ்விழிப்பை வரவழைக்கிறது. உண்மையில் வாழ்க்கையில்

தோல்வியில்லை; வெற்றியும், பெருவெற்றியுந்தான் உள்ளன. வெற்றி-தோல்வி என்பவை மனிதனுடைய கருத்துகள். மேல் நிலையில் இரண்டுமே இல்லை. உயர்ந்த ஆன்மீக நிலையில் வாழ்க்கை ஆனந்தமயமாக உள்ளது. ஆன்மீக ஆனந்தத்தை அன்னை நமக்கு வாழ்க்கையில் பேரின்பமாக அளிக்கிறார்.

ஆன்மீக வாழ்க்கைஎன்பது வேறு. வாழ்க்கையில் ஆன்மாவைக் காண்பதுஎன்பது வேறு. வாழ்க்கையில் ஆன்மாவைத் தேடும்பொழுது தோல்வியைச் சந்தித்தால், பின்வருகின்ற பெருவெற்றிக்கு அது அறிகுறி என்று நிச்சயம் நம்பலாம்.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

புரிய வேண்டும் என்பது அறிவின் ஆர்வம். உடமையாக்கிக் கொள்ள வேண்டும்என்பது உயிரின் ஆர்வம். இடைவிடாது திரும்பத் திரும்ப ஒன்றையே செய்வது உடலின் ஆர்வமான பழக்கம்.

புரிய வேண்டும்என்ற அவசியமில்லைஎன்றால் மனத்தின் எல்லையைக் கடக்க முடியும். சொந்தமாக்கிக்கொள்ள முயல்வதைத் தவிர்த்தால், ஆசை அழியும். செய்ததையே திரும்பத் திரும்பச் செய்ய விருப்பமில்லைஎன்றால் உடலின் பிடியிலிருந்து விடுபடலாம். இவை, பிரகிருதியின் பிடியில் இருந்து மனிதனை விடுவித்து ஆன்மாவை நோக்கிச் செல்ல உதவும்.

***அறிவையும், உணர்வையும் கடந்த ஆன்மசித்தி.***



## தமிழ்நாட்டுப் பழமொழிகளும், ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

21. *தாய், பிள்ளையானாலும் வாய், வயிறு வேறு.*

    ❈ **ஒவ்வொரு செயலும் தனிச்சிறப்புடையது.**

22. *நினைத்தனவெல்லாம் நடக்குமா**.

    ❈ **நினைக்காதனவெல்லாம் நடக்கும்.**

23. *அடி உதவுவதுபோல் அண்ணன், தம்பி உதவமாட்டார்கள்.*

    ❈ **அன்னை அருள்வதுபோல் அண்ணனோ, தம்பியோ உதவமாட்டார்கள்.**

24. *பணம் பாதாளம்வரை பாயும்.*

    ❈ **சமர்ப்பணம் சந்துபொந்தெல்லாம் நிரப்பும்.**

25. *உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா**.

    ❈ **மனிதன் இறைவனாகலாம்.**

26. *இல்லாதவனை, இல்லாளும் மதிக்கமாட்டாள்.*

    ❈ **நம்பிக்கையற்றவனுக்கு நல்லது எதுவும் நடக்காது.**

27. *விசும்பின் துளி வீழினல்லால் பசும்புல் காண்பதரிது.*

    ❈ **அருளன்றி வாழ்வில்லை.**

28. *பழகப் பழகப் பாலும் புளிக்கும்**.

    ❈ **பழகப் பழக புளியும் இனிக்கும்.**

29. *அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு**.

    ❈ **அளவுகடந்த பின்னரே அன்னையை அறிய முடியும்.**

30. *உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு.*

---

* In these proverbs the opposite is true in Mother.

❊ **அன்னையின் பாதுகாப்பு அதுபோல் விரைந்துவரும்.**

தொடரும்....

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நமக்குள்ள சந்தர்ப்பத்தில் அன்னைச் சட்டப்படி எந்தப் பெரிய திட்டம் பூர்த்தியாகவில்லையோ, அவ்விஷயத்தில் நம் முயற்சி, ஆர்வம், தெளிவு பூர்த்தி பெறவில்லைஎனப் பொருள்.

படிப்பறிவில்லாதவன் உதாரணத்தின் மூலம் எளிதில் புரிந்து கொள்வான்.

ஒரு விளக்கம் அல்லது முறை (as explanation or a method) அறிவுள்ளவனுக்குப் புரிய வைக்கும்.

இனிமையான பழக்கம், உணர்ச்சிபூர்வமானவனுக்கு விளக்கும்.

ஆசையுள்ளவனுக்கு ஆர்வம் தெளிவுறுத்தும்.

திறமை அல்லது திறன் அல்லது நிறைவு உடலுக்குப் புரிய வைக்கும்.

மௌனத்தால் தபஸ்வி எளிதில் ஏற்றுக்கொள்வார்.

திருஷ்டி, ரிஷிக்கு ஞானத்தைத் தரும்.

யோகி பார்த்தவுடன் புரிந்துகொள்வார்.

ரூபத்தை அறிவது தெய்வம்.

தன்னையே பிரம்மமாகவும், உலகைத் தான் ஆகவும், மற்றவரை உலகமாகவும் அறிவது சத்தியஜீவியம்.

***நிலைக்கேற்ற நிரூபணம் உண்டு.***





**P.82 A greater Force than the earthly held his limbs.**

**பூமியைவிடப் பெரிய சக்தி அவனைத் தாங்கிப் பிடித்தது.**

- ✡ **அவனது காணாத லோகங்களைப் பெருஞ்சக்திகள் கண்டுகொண்டன.**
- ✡ **வினோதமான சக்திகள் செயல்பட்டு வலுவான கரங்களைத் திரையிட்டு மூடின.**
- ✡ **மனமெனும் முப்புரிநூலை அவிழ்த்து விடுதலை செய்தன.**
- ✡ **ஆண்டவனின் பார்வை அகல விரியும் மோட்சலோகம்.**
- ✡ **உடை உணர்த்தும் உடலுருவம்.**
- ✡ **ரூபத்தை கடந்து மறைந்துறையும் பிரம்மம்.**
- ✡ **பிரபஞ்சம் உணர்ந்து பெற்ற பிரம்ம திருஷ்டி.**
- ✡ **கருவிகள் பெருகிச் சிறந்தன.**
- ✡ **அகல விரியும் பூதக்கண்ணாடி மாயையைக் கரைத்தது.**
- ✡ **நழுவும் கையின் தவறும் செயல்.**
- ✡ **பிரம்மாண்டமான தோற்றம் அணுவாகச் சுருங்கியது.**
- ✡ **சிறிய அகந்தை சேர முடியாமற்போயிற்று.**
- ✡ **பிரம்மத்தின் பிரம்மாண்டமான லோகத்தில்,**
- ✡ **உடலே உடையும் ஓடாயிற்று.**
- ✡ **மனம் பல வண்ண ராஜ்யசபையாயிற்று.**
- ✡ **அழியாத அமரன் அரச கொலுவீற்றிருக்கும் சபை.**
- ✡ **அவன் ஆத்மா தெய்வச் சூழலை நுகர்ந்தது.**
- ✡ **இடியோசையும் அதனுடன் இசையும் அலையோசையும்.**
- ✡ **மாயவேலியைக் கடக்கும் சிறைப்பட்ட தெய்வம்.**

✡ பெருந்தடைகள் அழியப் போட்டியிட்டன.

✡ அசைவற்ற அஸ்திவாரத்தில் உலகத்துடன் ஒன்றி நின்றன.

✡ வேலையின் நம்பிக்கை வீழ்ந்து மாய்ந்தன.

✡ எண்ணமும், செயலும் மையமாகி மறுக்கமுடியாதபடிக் கவர்ந்தன.

✡ அசையாத நிலையான எண்ணங்கள்.

✡ எடுத்த பிறவியின் நடையில் தம்மை அழித்துக்கொண்டன.

✡ ஆழ்ந்த இரகஸ்யத்தின் கசந்த வேர்கள்.

✡ எண்ணமும், செயலும் அவற்றிடையே உலவின.

✡ பயங்கர எல்லையைக் கடப்பதைத் தடை செய்தன.

✡ ஊமை இருள் பெருங்காவலனாயிற்று.

✡ சிறகற்ற ஆத்மாவைச் சூழும் திறன் பெற்றது.

✡ மனத்தின் அஞ்ஞான எல்லை எனும் அரங்கம்.

✡ காலத்தைக் கடந்து இரட்டையைக் காக்க மறுத்தது.

✡ தம் பெருங்கடமையைவிட்டு மறைந்தன.

✡ சிருஷ்டியின் பெருமை நிறைந்தபின் சின்னமாக இருந்தது.

✡ சூன்யம் விரிந்து தன் அசுர வளைவை இழந்தது.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நாம், பிறந்த மண்ணின் பகுதி. நம் உடலில் உறையும் ஆன்மாவின் பகுதியாகவும் நாமிருக்கின்றோம். ஆன்மா-வைக் கண்டு சித்தி பெறுபவன் யோகி. உடல் பிறந்த மண்ணின் ஆன்மீகத்தைக் காண்பவன், பூரண யோகி.

***உடல் பிறந்த மண்ணின் ஆன்மீகம்.***



# ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

N. அசோகன்

**161.** பர்சனல் சௌகரியங்களை ஒதுக்கிவைத்துவிட்டு வேலைக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் வேலைக்கேற்ற மனோபாவத்துடன் செயல்படுகிறார்கள். மாறாக வேலையைவிட பர்சனல் சௌகரியங்களைப் பெரிதாக நினைக்கின்றவர்கள் வேலையை வெற்றிகரமாகச் செய்யமாட்டார்கள்.

**162.** கிரியேட்டிவ்ஆன வேலை செய்கின்றவர்களுக்குச் சுதந்திரம் மிகவும் அவசியம். கிரியேட்டிவ்ஆன வேலையை அதிகாரத்தின் கீழ் செய்யும் வழக்கமான வேலைபோல் செய்ய முடியாது.

**163.** நாள்தோறும் அர்த்தமில்லாத வேலைகளைச் செய்துகொண்டு ஒருவர் தம்மைச் சுறுசுறுப்பாக வைத்துக்கொள்ளலாம். அதனால் அவர் உருப்படியாக ஏதேனும் சாதிக்கிறார்என்று சொல்ல முடியாது.

**164.** பண்புகளைக் கடைப்பிடிப்பதில் பல நிலைகள் இருக்கின்றன. சுத்தம், காலம் தவறாமை, தரம், மற்றும் செயல் நேர்த்திஎன்று இவற்றையெல்லாம் கடைப்பிடிப்பதில் நிறைவை எட்டிவிட்டோம்என்று அவ்வளவு சுலபமாகச் சொல்லிவிட முடியாது.

**165.** ஆகவே பண்புகளைக் கடைப்பிடிப்பதில் நாம் எந்நிலையில் உள்ளோம் என்று அடிக்கடி நம்மைப் பரிசீலனை செய்துகொள்வது அவசியமாகிறது.

**166.** எண்ணிக்கை அதிகரிக்கும்பொழுது தரம் குறைகிறதுஎன்பதை நாம் மருத்துவம் மற்றும் கல்வித்துறைகளில் பார்க்கிறோம். இதற்கு விதிவிலக்கு உண்டுஎன்றால், அதை நாம் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும்.

**167.** பகவான் ஸ்ரீ அரவிந்தரின் கருத்துப்படி எண்ணிக்கை மற்றும் அளவு, தரம் என்று இவற்றிலுள்ள வித்தியாசங்கள் எல்லாம் நமக்கு நிஜமாகத் தெரிகின்றனவேயொழிய சத்தியஜீவிய நிலையில் இவையெல்லாம் வெறும் பிரமைதான்.

**168.** ஆன்மீக குணங்கள் நம் அறிவின்மூலம் வெளிப்படும்பொழுது பண்புகளாக உருவெடுக்கின்றன. உதாரணமாக, உண்மை ஆன்மீகத்திற்கு உரியது. நம் அறிவின்மூலம் பண்பாக வெளிப்படும்பொழுது நேர்மையாக வெளிப்படுகிறது.

**169.** சிறு விஷயங்களில் நாம் வெளிப்படுத்தும் நேர்த்தி முக்கியமான இடங்களில் நேர்த்தி இருப்பதற்கு அறிகுறியாகவும் அமையும்.

**170.** முதல், டெக்னாலஜி, மார்கெட் மற்றும் விற்பனையாகும் பொருள் என்று இவையெல்லாம் கண்ணுக்குத் தெரிந்த கம்பெனிச் சொத்துக்களாக அமைகின்றன. ஆனால், ஆர்கனைசேஷன்என்பது கண்ணுக்குத் தெரியாத சொத்தாகும்.

**171.** அழகாக, தெளிவாகப் பேசக்கூடிய திறமை ஒருவருடைய சாதிக்கும் திறனைப் பல மடங்கு அதிகரிக்கும்.

**172.** சுருக்கமான பேச்சு சிந்தனையின் தெளிவைக் குறிக்கும். அழகான மேடைப் பேச்சு சொல்வன்மையைக் குறிக்கும்.

**173.** அரசியல் தலைவர்கள் தம்முடைய பேச்சுத் திறனால் ஒரு நாட்டிற்கே போர் வெறியை உண்டாக்கியுள்ளார்கள். அதே சமயத்தில் அதே பேச்சுத் திறனால் வருகின்ற தாக்குதலைச் சமாளித்து நாட்டைப் பாதுகாக்கவும், மக்களை கிளர்ந்து எழவும் செய்துள்ளார்கள். பேச்சுத் திறன் இப்படி இரு வகைகளிலும் செயல்படக்கூடியது.

**174.** அதிகாரமாகப் பேசும்பொழுது நம் குரலை உயர்த்திப் பேசுவது வழக்கம். அதனால் நம் நெடுநாள் கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது நம் குரலைத் தாழ்த்திப் பேசுவது நம்முடைய எனர்ஜியைச் சேகரிக்க உதவும்.

**175.** ஒரு தெளிவான மற்றும் முறையான கம்யூனிகேஷன் நெட்வொர்க் இல்லாமல் எந்த ஒரு நிறுவனமும் அதனுடைய துறையில் முன்னணிக்கு வர முடியாது.

**176.** வெளிப்படையாகச் சொல்லிக் கேட்பதைவிட மௌனசக்தி காரியத்தை விரைவுப்படுத்தும். ஏனென்றால் நாம் மௌனமாக இருக்கும்பொழுது சக்தி விரயமாகாமல் முழுமையாக வேலைக்குச் செயல்படுகிறது.



**177.** பெருமையடித்துக்கொள்ளும்பொழுது நம்முடைய எனர்ஜி விரயமாவதால் அந்த அளவிற்கு அது வேலையைக் கெடுக்கும். பெருமையடித்துக் கொள்ளாமல் அமைதியாக வேலையைச் செய்கின்றவர்கள் அந்த அளவுக்கு வேலையை வெற்றிகரமாகச் செய்வார்கள்.

**178.** பகவான் ஸ்ரீ அரவிந்தரின் கருத்துப்படி மனிதன் பேசும் மொழிக்கு ஆழமும் இல்லை, உயரமும் இல்லை. அதனால்தான் அந்நாட்களிலேயே பரம்பொருளை வார்த்தைகளால் விவரிக்க இயலாதுஎன்று ஞானிகளும், ரிஷிகளும் கூறியிருக்கிறார்கள்.

**179.** ஆன்மீக அனுபவங்களை விவரித்துச் சொல்வதைவிட அமைதியான முறையிலேயே அதை மற்றவர்களுக்கு நாம் வழங்கலாம். ஏனென்றால் அந்த அனுபவங்கள் சம்பந்தப்பட்ட உணர்வுகளும் நாம் கையாளும் அமைதியைப்போல் மிகவும் சூட்சுமமானது.

**180.** நம் அறிவு மற்றும் உணர்வு மற்றும் உடம்பு ஆகியவை செய்கின்ற ஆர்ப்பாட்டம் காரணமாக நம் ஆன்மாவின் குரல் வெளியில் கேட்காமலேயே போய்விடுகிறது. மேற்கூறிய இம்மூன்றும் ஆர்ப்பாட்டம் இன்றி அடங்கிப்போனால் நம்முடைய ஆன்மாவின் குரல் தெளிவாகக் கேட்கும்.

தொடரும்.....

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

கருணையும், இனிமையும் தெய்வத்தின் சுபாவம். ஒருவரிடமாவது மனிதன் கருணையுடனும், இனிமையுடனும் இருக்கலாம். அவற்றை ஏற்றுக்கொள்ளும் மனிதன் தெய்வ நிலைக்கு உயர்வான்.

*கருணையை ஏற்று கடவுளாகும் மனிதன்.*

## அன்பர் கடிதம்

*ஓம் மதர் ஸ்ரீ அன்னை!*
*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய!*
*ஓம் ஆனந்தமயி சைதன்யமயி சத்தியமயி பரமே!*

நான் அன்னையின் அருளால் B.Pharmacy கோயம்புத்தூரில் படித்தேன். என் விருப்பத்திற்கு இணங்க மதர் என்னை M.B.A. சேர்த்தார்கள். அன்னையிடம் தினமும் நான் நன்கு படித்து கோல்டு மெடல் வாங்க வேண்டும், placementஇல் வேலை கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்தேன். மதர் அதேபோல் எனக்கு கேம்பஸ் இன்டர்வியூவில் செலக்டாகி 25,000 ரூபாய் சம்பளமும் கொடுத்திருக்கிறார். எல்லாம் அன்னையின் அருள். நான் முன்பெல்லாம் எனக்கு luck இல்லை என்று கருதினேன். ஆனால் இப்பொழுது அன்னையிடம் வந்தபிறகு என்னை எல்லோரும் lucky girl என்று கூறுகிறார்கள். அன்னையின் அருள்தான், இதுவரை கேம்பஸ் இன்டர்வியூ வாராத பெரிய சாப்ட்வேர் கம்பெனியை வரவழைத்து எனக்கு வேலையும் பெற்றுத் தந்திருக்கிறார்கள். இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னஎன்றால் அந்தக் கம்பெனியில் எங்கள் காலேஜில் இருந்து நான் ஒருத்தி மட்டும்தான் செலக்ட் ஆனேன். நான் அன்னையிடம் வேண்டியவாறு அன்னை வேலை பெற்றுத் தந்தார். அந்தக் கம்பெனியை மதர் எனக்காகவே வரவழைத்தது போன்று நான் உணர்ந்தேன். எல்லாம் அன்னையின் அருள். நான் ஜூன் மாதம் வேலையில் சேரவேண்டும்என்று அப்பாயின்மெண்ட் ஆர்டரும் கொடுத்துவிட்டார்கள். என் உயிர் உள்ளவரை நான் அன்னைக்கே சமர்ப்பணம். நான் அன்னையின் செல்லப் பிள்ளையாக இருந்து மேலும், மேலும் அன்னையின் அருளை அனுபவித்து சந்தோஷமடைய வேண்டும். நான் அன்னையிடம் இனி எதையும் குறிப்பிட்டுக் கேட்க விரும்பவில்லை. ஏனென்றால் அன்னைக்கு தன் பிள்ளையின் தேவைகள் தெரியும். அதன்மூலம் அன்னை என்னை என்றும் நிறைவாக வைத்திருப்பார்என்ற நம்பிக்கை. இதனை முழுவதுமாக நான் உணர்ந்துள்ளேன். அன்னைக்கு மிக்க நன்றி.

❀ ❀ ❀



## யோக வாழ்க்கை விளக்கம் V

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

கர்மயோகி

**914) அடுத்த உயர்ந்த தீவிரத்திற்கு நன்றியறிதல் நகர்ந்தால் முன்னிலையில் நன்றியறிதல் பூர்த்தியாகும்.**

*பலன் முன்னிலைக்கு வரும்.*

ஓராண்டு பயிற்சிக்கு அமெரிக்கா போக ஒரு சர்க்கார் ஊழியருக்கு ஏற்பாடாயிற்று. சர்க்கார் ஊழியர் வெளிநாடு போக சர்க்கார் அனுமதி தேவை. சர்க்கார் அனுமதிபெற ஓராண்டாகும், அல்லது கிடைக்காதுஎன்று அறிந்தவர் சர்க்கார் வேலையை இராஜினாமா செய்தார். அமெரிக்கா போய் வருவது அந்தக் காலத்தில் பெரிய அந்தஸ்து. போய் வந்தால் நடப்பதுபோல் போவதற்கு முன் நடக்க ஆரம்பித்துவிட்டார். அவருக்கு விசா கிடைக்கவில்லை. அத்துடன் அவர் விண்ணப்பத்தைப் பார்த்த அமெரிக்க எம்பஸி "இன்னும் இரண்டாண்டுக்கு விசாவுக்கு விண்ணப்பிக்கக் கூடாது" என உத்தரவிட்டனர். அதன் பிறகு அவர் அமெரிக்கா போகவே இல்லை.

- மனிதன் இனி வரப்போகும் நிலைக்குரிய அந்தஸ்தை நாடுவான்.
- அந்தஸ்து வர விஷயம் முடிய வேண்டும். முடிந்தும் நாளான பின்னரே அந்தஸ்து வரும்.

M.L.A. எலக்ஷனில் ஜெயித்துவிட்டால் மறுநாள் அவர் M.L.A. ஆகிவிடுவார். உடனே அவர் வீடு M.L.A. வீடாகும். பதவிக்குரிய அம்சம் அது. படிப்புக்கு அது இருக்காது. பட்டப்படிப்பில் சேர்ந்தால் பாஸ் செய்ய சில வருஷமாகும். பாஸ் செய்த அடுத்த ஆண்டு பட்டம் வரும். பிறகு வேலை உடனேயும் கிடைக்கும், நாள் தள்ளியும்

கிடைக்கும். வேலை கிடைத்தபின் படிப்புக்குரிய மரியாதை வரும். வேலை கிடைக்கவில்லைஎனில் அந்த மரியாதையில்லை. பெரிய கம்பனி ஆரம்பிப்பதாக பேப்பரில் பெரிய விளம்பரம் போட்டவுடன் பெரிய கம்பனிக்குரிய அந்தஸ்து வரும். சிறிய கம்பனி ஆரம்பித்தால் அது இருக்காது. கம்பனி ஆரம்பித்து சம்பாதித்து வீடு கட்டி கிரகப்பிரவேசம் செய்தால் கம்பனிக்குரிய மரியாதை வரும்.

- மனிதன் வரப்போகும் நிலைக்குரிய அந்தஸ்தை எதிர்பார்க்கும் பொழுது ஊர் முந்தையநிலை பலன் கொடுக்குமாஎன நினைக்கும். முந்தைய நிலை பலன் கொடுத்தாலும் நீடிக்குமா எனப் பார்க்கும்.

- நன்றியறிதலுக்குப் பல நிலைகள் உண்டு.

1. வாயால் நன்றி என்று சொல்லுதல்.
   அது பலருக்கு முடியாது, வாராது, மறந்துபோகும்.
2. உணர்ந்து, மலர்ந்த முகத்துடன் வாயால் நன்றி கூறுதல். இவர்கள் சொல் உணர்வால் பூரித்து நயமாகச் சிறக்கும்.
3. நெகிழ்ந்து, கண்ணீர் மல்க வாயால் பேச முடியாத நிலை.
4. உள்ளம் பூரித்து, உடல் புல்லரித்து, சொல் சிரமப்பட்டு எழுந்து புன்னகையாக மலரும் நிலை.

எந்த நிலையில் நாமிருந்தாலும் முன்னிலையில் நன்றியறிதல் பூரணம் பெறும்; பூர்த்தியாகும். வாழ்க்கை நம் மனம் போல நடக்கும்; அது நடக்கத் தவறாது. எது செய்தாலும் வாழ்க்கை நம் நிலையை மனதில் கொண்டு அதற்கேற்ப செயல்படும்.

**நன்றியை யாருக்குச் செலுத்தினாலும் வாழ்க்கை அனைவர் மூலமும், அனைத்து மூலமும் தன் நன்றியைச் செலுத்தும். உள்ளத்தின் நிலைக்கேற்ப வாழ்வின் பதில் பல மடங்கு சிறப்பாகவும், உயர்வாகவும் அமையும்.**



**நன்றி வாழ்வின் நல்வித்து.**

❀ ❀ ❀

**915) இலட்சிய உணர்வு, சேவை, உழைப்பு ஆகியவை பத்து வருஷ காலத்தில் முதிர்ந்து அடுத்த பத்து வருஷத்திற்குக் கடின உழைப்பைத் தருகிறது. முதல் பத்து வருஷம் உணர்வில் எழுந்த உருவங்கள் அடுத்த பத்து வருஷ உழைப்பால் வலியுறுத்தப்பட்டு உறுதி செய்யப்படுகின்றன.**

*பத்தாண்டு மனப்போராட்டம் பத்தாண்டு அதிர்ஷ்டமான உழைப்பைத் தரும்.*

- எண்ணம், உணர்வு, செயல், மனம், உயிர், உடலில் எழுகின்றன.
- உடலில் எழும் செயலுக்கு உயிரில்லை.
- உணர்வில் எழும் செயல் வேகமாகச் செயல்படும்; அதற்கறிவில்லை.
- மனத்தில் எழும் செயலுக்கு அறிவுண்டு. ஆனால் தெம்பிருக்காது; செயலாக மாற அதற்கு உடலின் ஒத்துழைப்பு வேண்டும்.
- உடல் நடக்கும்.
- வேகம் வந்தால் உற்சாகமாக நடக்கும்; எங்கு போகிறோம்எனத் தெரியாது.
- மனம் கடைக்குப் போக நினைத்தால், அந்த நினைப்புக்குத் தெம்பு இருக்காது; கால் எழுந்து போகாது.
- மனம் நினைப்பதற்கு தெம்பு வேண்டுமானால் உயிர் அதை ஆமோதிக்க வேண்டும்; உடல் ஒத்துழைக்க வேண்டும்.
- மனம் சினிமாவுக்குப் போக நினைத்தால் உயிர் தெம்பு தரும்; கால் எழுந்து ஒத்துழைக்கும்.
- சினிமாவுக்குப் போகும் எண்ணம் உதயமாவதுபோல் ஆபீஸுக்குப் போக மனம் நினைப்பதில்லை.
- அப்படி நினைத்தால் உற்சாகம் வருவதில்லை.

✡ உற்சாகம் வந்தால் கால் ஒத்துழைக்காது.

✡ ஒத்துழைக்காவிட்டால் வற்புறுத்தி செய்ய வேண்டும்.

✡ வற்புறுத்தி செய்யும் காரியம் பலன் சிறியதாக இருக்கும்.

✡ **இலட்சியமான எண்ணம் மனதில் எழுவதில்லை; எழுந்தால் உயிரும், உடலும் ஒத்துழைக்கா.**

✡ இலட்சியம் மனதில் தோன்றி, வளர்ந்து, சிறந்து, செறிவுபட நாளாகும்.

அதற்கு மனம் போராடும்.

போராட்டம் மனத்திற்கு வெற்றி தந்தால், அதற்குள் பத்து வருஷம் ஓடிவிடும்.

அது உயிரால் தெம்பு பெற்று, உடல் ஒத்துழைப்பால் செயல்பட்டால் பத்து வருஷம் செயல் நீடிக்கும். இது சமூகச் சேவை.

✡ சமூகச் சேவையைவிட தார்மீகச் சேவை - சத்தியத்தைக் கடைப்பிடித்தல், நல்லவனாக இருப்பது - மனத்தில் எழுவது சிரமம்.

✡ ஆன்மீக இலட்சியம் அதனினும் உயர்ந்தது.

✡ அன்னையை அறியும் ஆவல் ஆன்மீகச் சேவையைவிடச் சிறந்தது.

அதற்குப் பூர்வஜென்மப் புண்ணியம் தேவை.

அது மனதில் எழுந்து, உணர்வில் கனிந்து, செயலாகச் சிறக்கப் பத்து வருஷம் போதாது; பல ஜன்மங்களாகும்.

✡ பல ஜன்மங்களில் சேகரம் செய்த புண்ணியத்தை ஆன்மீகப் பலனாக மாற்றுவது யோகம். யோகத்திற்குப் பயன்படுத்தாமல் வாழ்க்கை சௌகரியத்திற்கு அதைப் பயன்படுத்துவது எளிது. அது வாழ்க்கை அபரிமிதமாகப் பரிமளிக்க உதவும். அப்படிச் செய்தால் தொட்டதெல்லாம் பொன்னாகும். செய்யாத வேலையும் பலிக்கும், தகுதிக்குமேல் வாய்ப்பு வரும், திறமைக்குமேல் பலன் கிடைக்கும். எந்தத் தவறு செய்தாலும் தண்டனை கிடைக்காது.



எதிரி எல்லா இடங்களிலும் தோற்பான். வாழ்வு இனிதாகும்.

**பல ஜன்மங்களில் சேகரம் செய்த புண்ணியம் சில நாட்களில் முழுவதும் செலவாகும்.**

செலவானபின் வாழ்க்கை தடம் புரளும். ஏற்கனவே இருந்ததற்கு எதிராகச் செயல்படும். வாழ்க்கைப் போராட்டம்என்பது என்னஎன்று தெளிவாகத் தெரியும். அந்த நிலையிலும் கொடுத்த காணிக்கை, செய்த சேவை, உள்ளத்து உண்மை ஓரளவு காப்பாற்றும். எந்த நேரமும் அருள் மிச்சமாக இருக்கும். மௌனக்கெட்டு விலக்காவிட்டால் நம்மை விட்டு நகராது. துரோகம் செய்யாவிட்டால் அருள் மறையாது.

தொடரும்.....

❀ ❀ ❀

## ஜீவிய மணி

**குருவுக்குரியது உள்ளத்தின் குகை.**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஏன் வெளியிலிருந்து நம்முள் எதுவும் வரவேண்டும்? நம் ஜீவனின் அமைப்பு அவற்றை ஈர்த்து ஏற்றுக்கொள்கிறது. அந்த அமைப்பைக் கரைக்க வேண்டும்.

***கரைய வேண்டிய ஜீவனின் அமைப்பு.***

# முன்னேற்றம் தரக்கூடிய சாதனை

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**N.** அசோகன்

## அறிவும் திறமையும்:

மிருகங்களைவிட மனிதன் மிகவும் மேம்பட்டிருப்பதற்கு முக்கியக் காரணம் அவனுடைய அறிவு உயர்ந்திருப்பதுதான். கடின உழைப்புடன் அறிவுள்ள செயல்பாடும் இணையும்பொழுதுதான் நமக்குச் சிறந்த பலன் கிடைக்கிறது. அறிவின் சேர்க்கை இல்லாமல் வெறும் கடின உழைப்பு மட்டும் வெளிப்படும்பொழுது பலன் குறைந்தபட்சமாகவே இருக்கும். விவசாயக் கூலிவேலை செய்பவர்கள் கடும்வெயிலில் 10 மணி நேரம் உடலால் உழைக்கின்றார்கள். ஆனால் அதற்கு ஊதியமாக அவர்களுக்குக் கிடைப்பது அதிகபட்சமாக 150 ரூபாய்தான். ஆனால் அதே அளவிற்குக் கடினமாக உழைக்கின்ற டாக்டர்கள், வக்கீல்கள், சாப்ட்வேர் இன்ஜீனியர்கள் மற்றும் மேனேஜ்மென்ட் நிபுணர்களுக்குக் கிடைக்கும் பலன் அபரிமிதமாக இருக்கின்றது. இதற்குக் காரணம் இவர்களுடைய செயல்பாட்டில் அறிவின் சேர்க்கை அதிகமாக இருப்பதுதான். உச்சநீதிமன்றத்தில் ஒரு hearingக்கு ஆஜராவதற்கு லட்ச ரூபாய் கேட்கின்ற வக்கீல்கள் உள்ளார்கள். ஒரு நாள் கன்சல்டிங் வேலை செய்வதற்கு அதே லட்ச ரூபாய் கேட்கின்ற மேனேஜ்மென்ட் நிபுணர்கள் உள்ளார்கள். அரிந்தம் செளத்திரி என்ற மேனேஜ்மென்ட் நிபுணரின் மேனேஜ்மென்ட் lectureஐ கேட்க விரும்புகின்றவர்கள், அந்த ஒரு நாளைக்கு மட்டும் 25,000/- ரூபாய் கட்டினால்தான் அவற்றைக் கேட்க முடியும். ஆகவே அறிவுபூர்வமான செயல்பாடு வெறும் உடலுழைப்பைவிட பல மடங்கு உயர்ந்தது என்பதில் சந்தேகமே இல்லை.

அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளான இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளும் எப்படி இந்தியா,



பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளைவிட வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்துள்ளனஎன்று பலர் கேட்கிறார்கள். இதற்குப் பதில் சொல்வது மிக எளிது. இந்நாட்டு மக்களுடைய கல்வித்தரம் மற்றும் skill level நம் நாட்டு மக்களுடைய கல்வித் தரத்தைவிட பல மடங்கு உயர்ந்திருப்பதே இதற்கு முக்கியக் காரணம். இரண்டாம் உலகப் போர் சமயத்தில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகள் கடுமையாகச் சேதமடைந்துவிட்டன. கட்டிடங்கள், சாலைகள், தொழிற்சாலைகள் போன்றவைகள் சேதமடைந்தனவேயொழிய, மக்களுடைய கல்வித் தரம் மற்றும் skill level ஆகியவை பாதிக்கப்படவில்லை.

ஆகவே மீண்டும் அமெரிக்க மார்ஷல் plan என்ற திட்டத்தின் கீழ் மேற்கண்ட நாடுகளுக்கு ஏராளமான நிதியுதவி கிடைத்த பொழுது, இந்நாட்டு மக்கள் விரைவாக மீண்டும் தம் நாடுகளைச் சீர்படுத்திக்கொண்டனர். இரண்டாம் உலகப் போரின் சமயம் இதே அளவிற்கு இந்தியா சேதமடைந்திருந்தால், ஏராளமான நிதியுதவி கிடைத்திருந்தால்கூட இதே வேகத்தில் நம் நாடு சீர் பெற்றிருக்காது. ஏனென்றால் 1940ஆமாண்டுஅளவில் நம் நாட்டு மக்களுடைய கல்வித் தரமோ மற்றும் skill லெவலோ ஐரோப்பியர்கள் அளவிற்கு உயர்ந்திருக்கவில்லை.

இப்பொழுதுகூட இன்னும் 20 அல்லது 30 வருடங்களில் அமெரிக்காவிற்கு நிகராக இந்தியாவின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்றொரு பேச்சு நம் நாட்டில் அடிபடுகிறது. இதைச் சாதிக்க வேண்டுமென்றாலும் இந்த இடைப்பட்ட காலத்தில் நம் நாட்டு மக்களின் கல்வித் தரம் மற்றும் skill level உயர்ந்தால்அன்றி இப்படி அமெரிக்காவிற்குச் சமமாக உயர்வது கடினம்.

முன்னேற்றம்என்பது வெறும் முதலீடு மற்றும் டெக்னாலஜியை பொருத்ததில்லை. மக்கள் திறமைசாலிகளாக இல்லாத சமயத்தில் பெரிய முதலீடு செய்தாலும், அது பெருமளவிற்கு விரயமாவதற்கு வாய்ப்புள்ளது. இந்திய அரசாங்கத்திற்கே இவ்விஷயத்தில் நிறைய ஆர்வமுண்டு. வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளவர்களை உயர்த்த நம்

நாட்டு அரசாங்கம் பல திட்டங்களின் கீழ் ஏழை மக்களுக்கு நிதியுதவி வழங்கிவருகிறது.

ஆனால் பெரும்பாலானவர்கள் அந்நிதியுதவியை விரயம்தான் செய்கிறார்களேயொழிய ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதில்லை. இதற்குக் காரணம் முன்னேற வேண்டுமென்ற ஆர்வம்கூட இவர்களுக்கு இருப்பதில்லை.

அன்னை அன்பர்கள் கடின உழைப்பாளிகளாகவும், திறமை-சாலிகளாகவும் இருக்கும்பட்சத்தில் அவர்களுடைய உழைப்பின் பலனை அன்னையின்அருள் பல மடங்கு பெரிதாக்குகிறது. அருளுக்கு இப்படி பலனைப் பெரிதாக்கும் திறனுண்டு. ஆனால் எல்லா அன்னை அன்பர்களும் திறமைசாலிகள்என்று சொல்ல முடியாது. திறமை குறைந்தவர்கள் இதற்குப்பதிலாகத் தம்முடைய நம்பிக்கை மற்றும் ஏற்புத்திறனை அதிகரித்துக்கொள்ளலாம். தம்முடைய கம்பெனியின் விற்பனையைப் பத்து மடங்கு பெரிதாக்கக்கூடிய திறமை தமக்கில்லை என்று நினைக்கின்ற அன்னை அன்பர்கூட அன்னையின் அருள் அதைச் சாதிக்கும்என்று திடமாக நம்பினார் என்றால் அந்நம்பிக்கை-யின் பலனாக அந்தப் பெருக்கம் வரும். திறமை குறைந்திருப்பதால் energy அதிகம் விரயமானாலும், உள்ளே வருகின்ற அன்னையின் அருள் ஏராளமாக இருப்பதால், இந்த விரயத்தையும் மீறிப் பலன் கிடைக்கும்.

## துணிந்து செயல்படுதல்:

சாதிக்க விரும்புகின்றவர்கள் வாழ்க்கையில் சில இடங்களில் துணிந்து செயல்பட்டால்தான் சாதிக்க முடியும். ஏனென்றால் வாழ்க்கைஎன்பது ஒரு நிலையில்லாத விஷயம். அதில் வெற்றி, தோல்வி, வாய்ப்பு, சிரமம், லாபம், நஷ்டம், உயர்வு, தாழ்வுஎன்று எல்லாமே கலந்துதான் வரும். நல்லவற்றை மட்டும் எடுத்துக்கொண்டு, கெட்டவற்றை எல்லாம் விலக்குவதற்கு ஒரு திறமையான செயல்பாடு தேவை. அத்திறமை தமக்குள்ளதென்று நம்புகின்றவர்கள் துணிந்து செயல்பட்டு வெற்றிவாகை சூடலாம். பொதுவாக எவருமே தம்



வாழ்க்கை முழுமையாகப் பாதுகாப்பாகவும், தமக்குக் கட்டுப்பட்ட-தாகவும் இருக்க வேண்டுமென்றுதான் விரும்புவார்கள். தம்முடைய குடும்பம் என்ற சிறிய வட்டத்திற்குள் வேண்டுமானால் வாழ்க்கையை ஒருவர் தம்முடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கலாம். குடும்பத் தலைவருடைய அதிகாரத்திற்கு மனைவியும், பிள்ளைகளும் கட்டுப்பட்டு நடந்தால், அந்நபருடைய குடும்ப வாழ்க்கை அவருக்குக் கட்டுப்பட்டிருப்பதாகச் சொல்லலாம். ஆனால் வெளிவாழ்க்கைஎன்பது நம் குடும்ப வாழ்க்கையைவிட மிகப்பெரியது. அதில் பல விஷயங்கள் நம் கட்டுப்பாட்டில் இல்லை. பிஸினஸ் செய்பவர்களை எடுத்துக் கொண்டால், அவர்கள் வாங்குகின்ற மூலப்பொருட்களின் விலையோ, மார்க்கெட்டில் கஸ்டமர்களிடமிருந்து வரும் டிமாண்டோ, போட்டியாக வரும் மற்ற சப்ளையர்களுடைய எண்ணிக்கையோ, அரசாங்கத்தின் வரி சம்பந்தப்பட்ட கொள்கைகளோ, தொழிலாளர்களுடைய நடவடிக்கைகளோ, ஆட்சியில் வரும் மாற்றங்களோ, எதுவுமே அவர்களுடைய கட்டுப்பாட்டில் இல்லை. இவற்றில் எதுவும் அவர்களுக்கு எதிராக மாறலாம். சமீபகாலமாக ஒரு டன் ஸ்டீலின் விலை இரு மடங்காக உயர்ந்துவிட்டது. இதன் காரணமாக fabrication வேலை செய்யும் workshopகள் எல்லாம் பாதிக்கப்பட்டு உள்ளன. ஒரு மூட்டை சிமெண்ட்டின் விலை 15 அல்லது 20 ரூபாய் ஏறினால்கூட கட்டிட வேலைகள் பாதிக்கப்படுகின்றன.

தொழிலதிபர்களின் வியாபாரத்தில் இவ்வளவு நிலையில்லாத விஷயங்கள் உள்ளனஎன்றால், விவசாயிகளின் தொழில் மேலும் நிலையற்றது. விவசாயிகள் வறட்சி மற்றும் வெள்ளம் இரண்டிற்கும் தயாராக இருக்க வேண்டும். கடந்த 2 வருடமாக தமிழ்நாட்டில் நிலவும் வறட்சியால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தவிர pest attack, விலையிறக்கம், வேலைக்கு ஆள் கிடைக்காமல் போவது, திருடு மற்றும் ஆடு, மாடு மேய்வது போன்ற மற்ற அசௌகரியங்களையும் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும். இப்பொழுதாவது crop insurance என்றொரு திட்டத்தின் கீழ் விவசாயிக்கு நஷ்டஈடு கிடைக்க வாய்ப்புள்ளது. 1970 மற்றும் 1980களில் இம்மாதியான திட்டங்களே இல்லை. விவசாயிகள் நிறைய risk எடுத்துத்தான் பயிர் செய்துவந்தார்கள்.

பதவி மற்றும் அதிகாரத்தை நாடுபவர்களுக்கு அரசியல் மிகவும் கவர்ச்சியான ஒரு துறையாகும். ஆனால் வெற்றி என்பது நிலையில்லை. M.P. தேர்தலில் வேட்பாளராக நிற்பவர்கள் 50 லட்சத்திலிருந்து ஒரு கோடி வரையிலும் செலவு செய்வதுமுண்டு. வெற்றி பெற்றால் அவ்வளவு செலவு செய்ததற்கு அர்த்தமிருக்கும். தோற்றால் அவ்வளவு பணமும் நஷ்டமாகிவிட்டதாக ஆகிறது. அரசாங்க வேலையில் இருப்பவர்கள் தேர்தலில் நிற்கவேண்டும் என்றால், பதவியிலிருந்து விலகியபின்தான் நிற்க முடியும். இதற்கு பயப்படுகின்றவர்கள் அரசியலில் முன்னேற வாய்ப்பே இல்லை. 1950 மற்றும் 1960இல் அரசாங்கப் பணிக்கு நல்ல மரியாதை இருந்தது. அதனால் படித்தவர்கள் அரசாங்கப் பணியை நாடிச் சென்றார்கள். தொழில், வியாபாரம் மற்றும் விவசாயம் போன்றவை படிக்காதவர்-களுக்கு ஒதுக்கப்பட்டவைகளாகக் கருதப்பட்டது. இப்பொழுது நிலைமை மாறிவருகிறது. இன்ஜீனியரிங் மற்றும் M.B.A. பட்டதாரிகள்கூட தொழிலில் நிறைய லாபமிருப்பதைக் கண்டு தொழில்துறையை நாடி வருகின்றனர். முன்புபோல் அரசாங்கப் பணியில் கிடைக்கும் செக்யூரிட்டி மற்றும் மரியாதைக்காக ஏங்கிக்கொண்டு இருப்பதில்லை.

சொல்லப்போனால் எந்தத் துறையிலும் ஏதாவது ஒரு risk இருக்கத்தான் செய்யும். டாக்டர்கள் நிறைய சம்பாதிக்கின்றார்கள் என்றாலும், இப்பொழுது நோயாளிகள் consumer courtற்கு இழுக்கின்ற அபாயம் உள்ளது. ஜூனியர் வக்கீல்கள் சீனியரிடம் வேலை செய்யும்பொழுது பல வருடங்கள் சம்பளமே இல்லாமல் வேலை செய்தாகவேண்டிய நிலைமையைச் சந்திக்கவேண்டியுள்ளது. சினிமாத் துறையில் நுழைகின்ற புதுமுகக் கதாநாயகர்கள் மற்றும் கதாநாயகி-கள் தொடர்ந்து இரண்டு படங்கள் தோல்வி படங்களாகக் கொடுத்-தால், அவர்களுக்கு அதன்பின்னர் அத்துறையில் தலையெடுக்க முடியாது என்ற அபாயமுள்ளது.

பள்ளிக்கூட ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி விரிவுரையாளர்கள் மற்றும் முதல்வர்கள் மாணவர்களின் வன்முறையைச் சில சமயங்கள் சந்திக்கவேண்டியுள்ளது. இப்படி எத்துறையை எடுத்தாலும் ஏதேனும்



risk இருக்கத்தான் செய்யும். துணிந்து திறமையாகச் செயல்பட முன்வரும்பொழுது ஆபத்துக்களை முறியடித்து, நாம் செய்கின்ற வேலையை வெற்றிகரமாக முடித்து, நல்ல பலனைக் காணலாம். அதுவும் அன்னை பக்தர்கள் அன்னை மேல் முழுநம்பிக்கை வைத்து செயல்பட்டார்கள் என்றால், எந்த இடர்ப்பாட்டையும் வெற்றிகரமாக முறியடிக்கக்கூடிய சக்தியை அன்னை நிச்சயம் அவர்களுக்குத் தருவார்.

*தொடரும்....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

முன்னேற்றம், புதியதைக் கற்றுக்கொள்வது, கற்றுக் கொண்டதைப் பூர்த்தி செய்வது என்பதற்கு இரு பாதைகள் உண்டு. கையால் கற்றுக்கொண்டு அதன் மீது ஆசை கொண்டு பிறகு மனதால் பூர்த்தி செய்வது முதற் பகுதி. மீண்டும் மனதில் ஆரம்பித்து, உணர்வாலும், உடலாலும் பூர்த்தி செய்தால் காரியம் முழு நிறைவு பெறும்.

ஆதிநாள் மனிதன் உடலில் ஆரம்பித்து மனதை நோக்கி முன்னேறுகிறான். இன்றைய மனிதன் அறிவாளியாக இருப்பதால், அறிவால் ஆரம்பித்து உடலாலும் பூர்த்தி செய்கிறான்.

நம்பிக்கை - வழிபாடு - பணிவுஎன்பது மனதில் ஆரம்பித்து உடலில் பூர்த்தியாவது. மனிதனால் அறிவில் ஆரம்பிக்க முடியும்என்பதைக் காட்டுகிறது.

***நம்பிக்கை, வழிபாடு, பணிவு என்பவை மனம், உணர்வு, உடலுக்குரியன.***

## ஆத்மா என்பது வாழ்வின் (Existence) அகம்; சத்தியம் அதன் புறம்.

✡ “இது சத்தியம்” என ஒருவர் அடித்துப் பேசும்பொழுது அவர் எதைச் சத்தியம் என்கிறார்.

கோர்ட்டில் வாக்குமூலம் கொடுக்கும்பொழுது, ‘இந்த நிலம் என்னுடையது’ என்று அவர் கூறினால் அந்த நிலத்தின் உரிமை அவருடையதுஎன அவர் நம்புகிறார். அந்த நம்பிக்கையை சத்தியம் என்கிறார்.

அவர் நம்புவது அவருக்கு உண்மையானால், அதையும் மீறி அவர் நம்பிக்கை பொய்என்ற நிலையும் இருக்கலாம். அவர் கூறுவது அவருக்கு சத்தியம். அவர் மனதில் பொய்யில்லை.

இதேபோல் பல உதாரணங்கள் கூறலாம். “என் அண்ணன் என்னை அடித்தான்” என சிறுவன் தாயாரிடம் கூறும்பொழுது அது உண்மையாக இருக்கலாம். இவனை அடித்தது தம்பி. அந்த நேரம் அண்ணன் அங்கு வந்தான். அண்ணன் அடித்ததாக இவன் நினைக்கிறான். அவன் நினைவு பொய். ஆனால் அவன் அதை நம்புகிறான்.

இவை உண்மையானால் கண்ணால் கண்டது, காதால் கேட்டதை மீறி தீர விசாரிப்பதே மெய் என்கிறோம். தீர விசாரித்து வந்த முடிவும் பொய். அதை மீறிய உண்மையுண்டான நேரம் உண்டு. முடிவான சத்தியம் என்று உண்டா? அதை எளிய மொழியில் கூற முடியாதா? கூறும் வகையில்லாவிட்டால் உதாரணமாகக் காட்ட முடியாதா? முடிந்தவரை சொல்லுவோம்.

சத்தியம்என்பது சத்புருஷனின் அம்சம்.



சத்புருஷன் அகம், புறம்எனப் பிரியும்பொழுது, அகம் ஆன்மா ஆகவும், புறம் சத்தியமாகவும் மாறுகிறது.

நாம் பேசும்பொழுது உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசலாம். உள்ளம் புறத்தைவிட அதிக உண்மையானது.

உள்ளம் உள்ளதை அறியாத பேதை நிலையுண்டு.

அப்பொழுது அதைக் கடந்த உண்மை உள்ளத்தில் புதைந்திருக்கும்.

நமக்கு உள்ளம் என்பது உயிர். அதைக் கடந்து மனமும், ஆன்மீக மனத்தின் 4 நிலைகளும், சத்தியஜீவியமும், ஜீவியமும், ஜீவனும் உண்டு.

உள்ளத்தைக் கடந்ததைப்போல் எல்லா நிலைகளையும் நிதானமாகக் கடந்து சென்றால் சத், சத்தியமாக எழுவதைக் காணலாம்.

அதன் சாயலை நாம் எந்த நிலையிலிருந்தாலும் அந்த நிலையில் காணலாம்.

### எது முக்கியம்:

நாம் பேசும்பொழுது, நினைக்கும்பொழுது, உணரும்பொழுது, உணர்வைக் கடந்து செல்லும்பொழுது, எந்த நிலையிலும் மனம் எது உண்மை, எது பொய்என அறியும். நாமறிந்த உண்மையை அகத்திலிருந்து புறத்தில் பேசுவது யோகம்.

**அது எளிதன்று.**
**எளிதாக இல்லாதது ஏழு நிலைகளைக் கடக்க உதவும்.**

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மனம் ஈடுபடாமல் அதிகப் பொறுப்பும், பாரமும் படபடப்பை அளிப்பதில்லை.

***உணர்வுள்ள உறவு படபடப்பை அளிக்கும்.***

# எந்தையும் தாயும்

சியாமளாராவ்

கார் டிரைவ் செய்தபடியே, அந்த நாய்க்குட்டிகளையும், அதன் தாய் நாய்களைப் பற்றியும் நினைத்தபடியே வந்தான் கௌதம். நினைவில் அவைகளின் குடித்தனம் (சம்சாரம்) பற்றி விரிந்தது. கண்களில் நீர்மணிகள் திரண்டன.

நாலு கால் பிராணி என்கிறோம்; அஞ்சறிவு மிருகம்என்று வாய் கூசாமல், அலட்சியமாகப் பேசுகிறோம். ஆனால்.... கொஞ்ச நாட்களாக அவன் பார்க்கும் காட்சி, மீண்டும் கண்களில் விரிந்தது.

'ஹவுஸிங் போர்ட்' வீட்டில்தான் முன்புறம் முள்வேலி போடப்பட்டு, அதற்குள் பூச்செடிகளை அழகுற வைத்திருந்தான். தினமும் காலையில் அந்தத் தோட்டத்தின் (ஆமாம், அவனுடைய மனதில் அது பெரிய நந்தவனமேதான்) ஒவ்வொரு செடியையும், இலைகளையும் தொட்டுத் தடவி, ஆசையோடு வருடுவான். மொட்டு துளிர்த்திருந்தால், அவன் முகம் பிரகாசமாகப் பளிச்சென்றிருக்கும். தண்ணீரைச் செடிகளுக்கு ஊற்றும்போது பூவாளியால், அந்தச் செடிகளுக்கு வலிக்குமோ என்பது போல், நிதானமாய் 'ஷவர்பாத்'போல் வார்ப்பான்.

அலமெண்டாவை, முள்வேலி போட்டிருப்பதால், அவைகளுக்கு வலிக்கும்என ஒரு பெரிய மூங்கிலை நட்டு அதன்மேல் படரவிட்டு இருந்ததில், இப்போது முதல் மொட்டு சின்னதாய் தலையாட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்து, அவன் மனம் சிறுபிள்ளையாய் குதியாட்டம் போட்டது. கார்னர் வீடானதால் பக்கவாட்டிலும் தோட்டம் அழகுற இருந்தது.



அன்றும் அதேபோல் காலையில் எழுந்து அவன் நந்தவனத்திற்கு வந்தபோது, ஏதோ 'கீச், கீச்' என்ற குரல்கள். என்னது சப்தம்? சுற்றும், முற்றும் பார்த்தான். தெரியவில்லை. சட்டென வீடு முடிந்து தோட்டத்தின் வரம்பு வீட்டையொட்டி திரும்பிய இடத்தில், இரண்டு பெரிய நாய்கள், ஏழெட்டு குட்டிகள்.

பாரதியாரின் பூனையைப் பற்றி எழுதிய பாட்டுபோல, வெள்ளையும் கறுப்பும், சாம்பலும், வெள்ளையும் பிரௌனும், கறுப்புமாக, வெறும் பிரௌனாக எனக் குட்டிகள்தான் கத்திக்கொண்டிருந்தன.

ஒரு தாய் நாய் மட்டும் வெளியேறியது. இன்னொன்று அங்கேயே எல்லாக் குட்டிகளையும் பாதுகாத்தபடியிருந்தது. சிறிது நேரத்தில் வெளியேபோன தாய்நாய் வர, இப்போது மற்றது சென்றது.

கௌதமுக்கு வியப்பான வியப்பு! அதன்பின் ஒருவேளை தான் நினைத்தது (நினைப்பது) தவறோ? யதார்த்தமாகக்கூட நடந்து இருக்கலாமே? எனத் தீவிரமாய் கண்காணித்துப் பார்த்ததில், தான் நினைத்தது உண்மைஎனப் புரிய, வியந்தே போனான். விழிகளில் நீர் நிரம்பித் தளும்பியது.

ஐந்தறிவாவது, ஆறறிவாவது.... ஹூம்.... பாரபட்சமில்லாமல் ஒன்று வெளியே போக, மற்றொன்று என்ன அழகாய் பாதுகாப்பாக இருக்கிறது! அதுவும் இரண்டும் மாறி, மாறி வெளியே போய்வருகிறது. உண்மையில் மனிதர்களுக்குள் இருக்கும் இந்த உணர்வுகள் காணாமல் போக, மிருகங்களிடம் குடிகொண்டுவிட்டதோ....!

'தட்' என்ற சத்தத்துடன் கார் எதிலோ மோத, "அம்மா....." என்ற கூக்குரலும், "என்னங்க ஆச்சு..... பகவானே..... என்னப்பா இப்டி காரை ஓட்டித் தள்ளிட்டே.... நான் என்ன பண்ணுவேன்! யாராவது வாங்களேன்...." முதியவளின் கூக்குரல், அழுகை காதில் விழ,

அதற்குள் காரை நிறுத்திய கௌதம், மனம் படபடக்க ஓடி வந்தான்.

வயதான ஒரு முதியவர், இவன் காரில் பட்டு, கொஞ்சம் தள்ளி ப்ளாட்பாரம் அருகில் விழுந்திருந்தார். முதியவளான அவரின் மனைவி

துடித்தாள், கணவரின் சிரசிலிருந்து கொட்டும் ரத்தத்தைப் பார்த்து.

கௌதம் பதறியேபோனான். முதியவளைக் காரில் பின்சீட்டில் உட்கார வைத்து, அடிபட்டவரை அவள் மடியில் சாயவைத்து, இருவரிடமும் வாய் மன்னிப்புக் கேட்டபடியிருக்க, உள்ளம் மட்டும் அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் நாமத்தை ஜபித்தபடியிருந்தது.

கார் நேராக ஒரு பெரிய ஹாஸ்பிடலின்முன் நின்றது. அவனைப் பார்த்ததுமே சிப்பந்திகள் ஓடிவந்தனர். முதியவரை ஸ்டிரெச்சரில் படுக்கவைத்து, தள்ளுவண்டியில் வேகமாக எமர்ஜென்சி வார்டுக்குள் நுழைந்தனர். உடனே சிகிச்சையும் ஆரம்பித்துவிட்டார் டாக்டர்.

முதியவளைத் தன்னோடு அணைத்தபடி, அவளுக்குச் சமாதானம் கூறியபடியே அங்கிருந்த நாற்காலியில் உட்காரவைத்தான் கௌதம்.

''அம்மா! ஏதாவது சாப்டீங்களாம்மா? கொண்டு வரவா?'' அவன் கேட்டதுமே, அவள் இரு கரங்களாலும் முகத்தைப் பொத்தியபடி சத்தம் இல்லாமல் குலுங்கிக் குலுங்கி அழுதாள். கௌதம் அரண்டு போனான்.

''அம்மா.... அம்மா... ஏம்மா அழறீங்க... ப்ளீஸ்... தயவுசெஞ்சு அழாதீங்கம்மா. அம்மா, அப்பாவுக்கு ஒண்ணும் ஆகாது. சீஃப் டாக்டரே அட்டெண்ட் பண்றதால, பயமேயில்லேம்மா. ரொம்ப கைராசி ஆனவர்ம்மா. ஒரு மணி நேரம் ஆகும்னு சொல்லியிருக்காங்க. வாங்க, கேன்டீனுக்குப் போகலாம்... வாங்கம்மா... ப்ளீஸ்மா.... வாங்க...''.

''இல்லேப்பா.... அழலே... இனிமே அழவேமாட்டேன். நீ... யாரோ? பேர் தெரியாது, பெத்தவங்களைத் தெரியாது. உனக்கும், எங்களப் பத்தி ஒண்ணும் தெரியாது.... ஆனா.... ஆனா.... உன் காருல அடிபட்டது மட்டுந்தானேப்பா நம்மள சந்திக்கவச்சது. நீ..... நீ.... எங்களை அப்பா, அம்மா....ன்னு...ம் ம்..... கூப்பிடறத என்னால..... என்னால....'' மேலே பேச முடியாமல் வயிறு குலுங்க அழுதவளைப் பார்த்து மிரண்டான் கௌதம்.

''அம்மா.... ஸாரிம்மா.... நான் அப்டி கூப்பிடறது உங்களுக்கு மனசுக்கு வருத்தம்னா.... ஸாரி.... இனிமே கூப்பிடலேம்மா.... ஸாரி....



மன்னிச்சிடுங்க....''.

''இல்லேப்பா.... நான் அப்டி நினைக்கலே.... நீ இப்டி அன்பா, அம்மா, அப்பான்னு.... முகமறியாத எங்களைக் கூப்டே பாரு, மனசு சந்தோஷத்துலதான் பொங்கிப்போய் அழுகை வந்துடுத்துப்பா.... சரி, வா.... கேன்டீனுக்குப் போகலாம்.... அவருக்கு....?''

''அம்மா.... டாக்டர் சொன்னபிறகு தரலாம். இப்ப நீங்க வாங்க அம்மா....'' சங்கடம் நீங்கியவனாக நிம்மதியுடன், அழைத்துப்போனான்.

சாப்பிட்டபின் கொஞ்சம் தெம்பானாள் முதியவள்.

''அம்மா! எங்கேயிருக்கீங்கம்மா? இங்கே.... எங்கே வந்தீங்க? அவருக்கு நல்லா ஆகிறவரை எங்க வீட்டுலேயேயிருங்க. யாருக்காவது ஃபோன் பண்ணனும்னாலும் சொல்லுங்க, தயங்காதீங்க..... சொல்லுங்கம்மா.....''.

இத்தனை நேரம் சோகமாகயிருந்தவளின் முகத்தில் உணர்ச்சிகளின் மாற்றம் அப்பட்டமாய் தெரிந்தது. முகத்தை அழுந்தத் துடைத்துக்கொண்டவளின் கண்களில், சினமா? கோபமா? ஆற்றாமையா? எதுவென சொல்லமுடியாத, கலவையான உணர்வுகள் மாறி மாறித் தோன்றின.

கேட்டது தப்போஎனத் தோன்றியது கௌதமுக்கு. வினாடிகளில் முகத்தை, அத்தனை உணர்வுகளிலிருந்தும் விடுவித்துக்கொண்டவள், இறுகிய முகத்துடன் கூறினாள், ''நாங்கள் அனாதைகள்''.

திடுக்கிட்டு, விதிர்த்தேபோனான் கௌதம்.

''அம்மா!.... என்ன சொல்றீங்க?''

''சார்.... நீங்க வந்து உங்கப்பாவைப் பார்க்கலாம். டாக்டர் கூப்பிடறார்... வாங்க... வாங்கம்மா....''.

கௌதமின் சரீரம் முழுவதும் சிலிர்த்துப் புல்லரித்தது. கண்களின் விளிம்பில் நீர்மணிகள் வெளியே வருவதா, உள்ளே போவதா எனத் தயங்கிய வினாடியிலேயே, இமைகள் மூடி உள்ளிக்கிழுத்தன.

''அம்மா, வாங்கம்மா.... வாங்க....'' அவர் தோள்களை அன்போடு

அணைத்தபடி அழைத்துப்போனான்.

முதியவர் கண்கள் மூடி, தலையில் கட்டுடன் படுத்திருந்தார். டாக்டர் இன்னும் அங்குதான் இருந்தார்.

கௌதமனின் மனம் படபடத்தது. 'அன்னையே சரணம்' மட்டும் இதுவரை நிற்காமல், சுழலும் 'டேப்'பைப்போல் இதயம் என்னும் பெட்டகத்தில் சுழன்று, சுழன்று வந்தபடியிருந்தது.

''அவருக்கு ஏதானுமா? பயமாயிருக்குப்பா.... எனக்கு....''.

தளும்பும் விழிகளுடன் கேட்டவளை, அன்போடு தழுவி, சமாதானம் செய்தான் கௌதம்.

''டாக்டர்... அவருக்கு.... அவருக்கு....'' மேலே பேச்சு வாராமல் திணறினாள் முதியவள்.

''ஒண்ணுமில்லைம்மா. அடிபட்டதில் 'பிளட்' கொஞ்சம் போனதால, அயர்ச்சியிருக்கு. நாங்க கொடுத்திருக்கிற டிரீட்மெண்ட்ல நிச்சயமா சீக்கிரமாவே குணமாயிடுவார்மா. ஸலைன்லயே மருந்துகளையும் கலந்திருக்கிறதால... பயமில்லே. டிரிப்ஸ் ஏறிட்டிருக்கு. மூணு மணி நேரத்துக்கு அவரை யாரும் தொந்திரவு பண்ண வேண்டாம். உயிருக்கு அபாயமேயில்லைம்மா. வயசானதால, அடியைத் தாங்கிக்கிற சக்தியில்லே. டோண்ட் வொர்ரி. வரேன் கௌதம். அவர் எழுந்தார்னா, ரொம்ப பேச்சுக் குடுக்க வேண்டாம். ஆகாரமும் நீங்க தர வேண்டாம். நர்ஸ் பார்த்துப்பாங்க. வரேம்பா... வரேம்மா.... கவலையேபடாதீங்க...''.

டாக்டர் கூற, தளும்பும் கண்களுடன் நன்றி கூறினாள் முதியவள்.

கௌதம், தன் பர்ஸைத் திறந்தான். உள்ளேயிருக்கும் அன்னை, ஸ்ரீ அரவிந்தரை தன் கண்களில் ஒற்றிக்கொண்டான்.

''நன்றி அன்னையே, நன்றி அன்னையே, நன்றி அன்னையே'' என மனம் கசிந்து, கண்கள் மல்க, இதயபூர்வமாய் கூறினான். பர்ஸின் இன்னொரு பகுதியிலிருந்து ரூபாயை எடுத்து, பர்ஸில் அவர்களிருந்த இடத்தில் வைத்தான் காணிக்கையாக.

''அன்னையே, என்னுடைய அஜாக்கிரதையால ஏற்பட்ட இந்த



அசம்பாவிதத்துக்கு உங்கள் காலடியில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்கிறேன். என்னை மன்னித்து அருளியதற்கு நன்றி. இனி, எந்தக் காரணம்கொண்டும் என் மனம் எந்த நேரத்திலும் அலைபாயாமல் இருக்க அருள்வாய் அம்மா. வயதான இந்தத் தம்பதிகளுக்குக் கண்டிப்பாய் நான் உதவுவேன். உங்கள் அருள் இதில் எனக்குத் துணையாக வரவேண்டும். உங்களையே நம்பியுள்ள என்னை எப்போதும் நீங்கள்தான் வழிநடத்த வேண்டும். உங்களுடைய வழி நடத்தலே எனக்கு அங்கீகாரம். நானாக எதையும் செய்யக்கூடாது. செய்யவிடாதீர்கள். தவறு செய்தால் காட்டிக்கொடுத்துவிடுங்கள். நான் மனிதப்பிறவிதானே. உங்கள் பிள்ளைதானே. சில சமயத்தில் மனதுள் குமுறும் எண்ணங்களை அடக்க முடியாமல் தத்தளித்துத் தவித்துப்போகிறேனே....'' ஒரு குரல் அவனை உலுக்கியது.

''ஸார்.... ஸார்.... உங்கப்பா கண் விழிச்சுட்டார். வந்து பாருங்க. ஆனா பேச வேண்டாம். எதுவும் சாப்பிடக் கொடுக்கவும் வேண்டாம். ப்ளீஸ்... வாங்கம்மா....''.

முதியவளின் கரங்களை இதமாகப் பிடித்தபடி நடந்தாள் நர்ஸ். பின்தொடர்ந்தான் கௌதம்.

முதியவர், மனைவியைப் பார்த்ததும் சிரிக்க முயன்று தோற்றார். கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. சட்டென கௌதம் அவர் கரங்களை அன்பாக வருடினான்.

''அப்பா! ரொம்ப வலிக்கிறதாப்பா.... ஸாரிப்பா.... என்னாலதானே உங்களுக்கு இந்தக் கஷ்டம். மன்னிச்சுடுங்கப்பா. டாக்டர், பயமே இல்லைன்னு அம்மாகிட்டயும் சொல்லிட்டார்பா. இன்னிக்கே வீட்டுக்கு அனுப்பிச்சுடுவார். ஆனா, சாயந்திரத்துக்கு மேலே ஆயிடும். அம்மா, இங்கேயே இருக்கட்டும். நான், வீட்டுக்குப் போய் கொஞ்சம் ஏற்பாடுகள் பண்ணிட்டு வரேம்பா. தைர்யமாயிருங்க. நர்ஸ் பார்த்துப்பாங்க. அம்மா, வரேம்மா....''.

கௌதம் பேசிவிட்டு, நர்ஸிடம் கூறிவிட்டு, வீட்டுக்குப் புறப்பட்டான்.

⇛⇛⇛⇛⇛

தோட்டக்கார கந்தனைக் கூப்பிட்டான். வீட்டை முழுவதும் மீண்டும் அவனை ‘வேக்குவம்’ கிளீனரால் சுத்தம் செய்யச் சொன்னான். அங்கிருந்த கட்டிலையும் சுத்தம் செய்து மெத்தையைத் தட்டிப்போட்டு, அட்டாச்சுடு பாத்ரூமை, சுத்தமாயிருந்தும், மீண்டும் சுத்தம் செய்து, அந்த அறையிலும் இருந்த அன்னை, ஸ்ரீ அரவிந்தரை வணங்கினான். ஊதுபத்தி ஏற்றி, மனம் கசிந்துருக பிரார்த்தித்தான்.

‘‘அன்னையே! எல்லாமிருந்தும் ஒன்றுமேயில்லாதவனாய் இருக்கிறேன். என் தவறுகள் என்னைத் தண்டித்துவிட்டது. அந்தத் தண்டனையை நான் இப்போதும் உங்கள்முன் ஒத்துக்கொண்டு, ஏற்றுக்கொண்டவனாயிருக்கிறேன். இப்போதும் நான் செய்த தவறு, ஒரு முதியவருக்கு என்னால் ஏற்பட்ட, என் கவனக்குறைவால் நடந்த உடல் உபாதையும், வலியும், வேதனையும், மன்னித்துவிடுங்கள் அம்மா. என் கவனக்குறைவுக்காக எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள். அவரை, சீக்கிரமாகக் குணமாக்கி விடுங்கள். நான் அவர்களை என் பெற்றோர் உருவத்தில்தான் பார்க்கிறேன். மன்னித்து, அருள வேண்டும் அன்னையே.... உங்கள் சரணமே எனக்குத் துணையம்மா.... அன்னையே சரணம், அன்னையே சரணம், அன்னையே சரணம்’’.

மூடிய கண்கள், அன்னையிடம் லயித்துப்போன மனம், வதனத்தில் அன்னையின் சரணம்எனத் தன்னிலை மறந்து, அன்னையிடமே லயித்திருந்தான் கௌதம். எத்தனை நேரமோ தெரியவில்லை. தானாகவே நிதரிசனத்திற்கு வந்தான். மளமளவென குளித்து முடித்து, மீண்டும் பிரார்த்தித்து, வெளியேறினான்.

ஆஸ்பத்திரியில், முதியவர் இப்போது எழுந்து உட்கார்ந்திருந்தார். அவருக்கு நர்ஸ் ஏதோ ஆகாரம் தர, அதைச் சாப்பிட்டபடியிருந்தார். அருகில் அவரின் துணைவி.

சத்தமிடாமல் டாக்டரிடம் சென்று பேசினான்.

‘‘கௌதம், இனி பயமேயில்லேப்பா. வீட்டிற்குக் கூட்டிப்போகலாம். நாளைக்கு மறுநாள் வந்தால்போதும். கட்டை அவிழ்த்து பார்த்தபின் வேண்டுமானால் கட்டு போடலாம்; இல்லே பிளாஸ்த்ரி போதும். ஆனால், அவர் பாத்ரூம் போகும்போது, கைப்பிடித்து அழைத்துப் போயே ஆக வேண்டும். மிகுந்த ரத்தம் போனதில் பலகீனமாக இருக்கிறார். கூடவே, அவரருகில் யாராவது எப்போதும் இருக்கணும் கௌதம்.... மத்தபடி, ஆகாரத்தில் எந்தவிதமான ரெஸ்டிரிக்ஷனும் கிடையாதுப்பா. டேக் கேர்’’.

‘‘டாக்டர், எனக்கு ஒரு ஹெல்ப் பண்ணணுமே. அவங்க ரெண்டு பேருமே வயசானவங்க. எனக்கும் என் கம்பெனி வேலையிருக்கு. அவங்களைப் பார்த்துக்க ஒரு நர்ஸை ஏற்பாடு செய்தால்.... ரொம்ப சௌகர்யமாயிருக்கும். முடியுமா?....’’

‘‘நிச்சயமா.... மீனா..... நீ போக முடியுமா, இல்லே கிளாராவை அனுப்பட்டுமா? டே அண்ட் நைட் இருக்கணும். பணம் பற்றி கவலைப் படாதே. முடியுமா, முடியாதாங்கறதை யோசிச்சுச் சொல்லு....’’.

மீனா ஐந்து நிமிடங்களுக்குள்ளேயே யோசித்து முடிவெடுத்தாள். தன் ஒப்புதலையும் கூறி, வீட்டிற்கும் ஃபோன் செய்து கூறிவிட்டாள்.

அவர்களிருவரையும் தன் வீட்டிற்கே அழைத்து வந்துவிட்டான் கௌதம்.

வீட்டிற்குள் நுழையும்போதே அன்னை, ஸ்ரீ அரவிந்தரைப் பெரிய மனித உருவ நிலையில் பார்த்ததில், அந்த முதியவளுக்குள் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டதோ....

நிதானமாய் நடந்து, அவர்கள் எதிரில் நின்றாள். கண்ணீர் தளும்பியது. அவளுள் மட்டும் நிம்மதியும், தைர்யமும் போட்டி போட்டுக் கொண்டு நுழைந்தது. வதனத்தில் அவளையுமறியாமலேயே சிரிப்பு உற்பத்தியானது; பரவசம் ஏற்பட்டது.

அவர்களிருவரின் கீழே அழகான இரு பாதங்கள், செக்கச் சிவந்த புடவையும், பார்டருமாய் இருந்தது. பாதங்களினருகில் சென்றாள். தொட வேண்டும்போலிருந்தது. தொடலாமா, கூடாதாஎன்கிற குட்டி சர்ச்சை ஒரு நிமிடத்திற்கும் குறைவாக அவளுள் எழுந்தது. அதையும் மீறிய உள்ளுணர்வு அவளைத் தொடத் தூண்ட, தைர்யமாகப்

பாதங்களைப் பரவசத்தோடு நடுங்கும் கரங்களால் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். மீண்டும், மீண்டும் அந்தப் பாதங்-களைத் தொடவேண்டும், வருடவேண்டும், தன் சிரத்தை பாதங்களின் மேல் படரவிட வேண்டும் என்ற ஓர் அவா தீவிரமாக ஏற்பட, சட்டெனத் தன் சிரத்தைப் பாதங்களின் மேல் வெகு நிதானமாக, பயமா? மரியாதையா? என்று புரியாத நிலையில் வைத்தாள். அவ்வளவுதான் தெரியும் அந்த முதியவளுக்கு.

வெகு சில வினாடிகளிலேயே.... அம்மா.... அம்மா..... அம்மா.... எனக் கதறியபடியே கேவிக் கேவி அழுதாள். அந்த அழுகையில் இப்போது துன்பமில்லை, துயரமில்லை; ஓர் இனம்புரியாத நெகிழ்ச்சியும், இதமும் தெரிந்தது. சரீரம் பூராவும் சிலிர்த்து நடுங்கியது. மனதினுள் ஒரு தைர்யம் தானாக வந்து சிம்மாசனமிட்டு அமர்ந்தது. அப்படியே சரிந்தவளைத் தாங்கிப் பிடித்தது யார்எனத் தெரியாத நிலையிலேயே சரிந்தாள். இமைகள் மூடிய நிலையில், அதரத்திலிருந்து மிக, மிக மெல்லிய குரலில், ‘‘அம்மா, அம்மா, அம்மா’’ என்ற வார்த்தையைத்தவிர வேறெதுவுமில்லை. சரீரம் முழுவதும் மெல்லிய நடுக்கம்.

தாங்கிப் பிடித்தவன் கௌதம். அவன் சரீரமும் சிலிர்த்தது. அப்படியே கீழே தன் மடியில் படுக்கவிட்டு, தானும் கண்களை மூடி பிரார்த்திக்க ஆரம்பித்தான் கௌதம்.

என்றுமேயில்லாத வினோத உணர்வு அவன் மேனி முழுவதும் விளையாடியது. புளகித்தேபோனான். இமைகளைத் திறக்க மறுத்தான். ஆமாம், இமைகளைத் திறந்தால், அந்த அனாயாசமான, அதிசயமான, அதிப்பிரியமான உணர்வு அவனை விட்டு விலகிவிட்டால்..... ம்.... ஹூம்.... இன்னும் வேண்டும், வேண்டும்என அந்த உணர்வை மனமார, நெஞ்சார அனுபவித்தான். மூடிய இமைகளிலிருந்து கண்ணீர்ப் பூக்கள் சின்னஞ்சிறிய ஸ்படிகங்களாக அவன் கன்னங்களில் உருண்டன. ம்ஹூம்..... எதுவுமே அவர்களிருவருக்கும் தெரியவில்லை; ஆழ்ந்து போயிருந்தார்கள், வெளியுலகச் சத்தங்களோ, சலனமோ அவர்களை அண்ட மறுத்ததால்.



பெரியவருக்கு ஆகாரம் ஏதாவது தர வேண்டியிருந்தது, காரணம் மருந்து கொடுக்க வேண்டும். மீனா அவர்களைத் தேடி வந்தபோது கௌதமும், பெரியவரின் மனைவியும் அப்படியொரு ஆழ்ந்த தியானத்திலிருந்ததைப் பார்த்து, அதைத் தொந்தரவு செய்ய வேண்டாமென சமையலறைக்குள் சென்றாள். குளிர்ப்பெட்டியில் இருந்த ப்ரெட்டையும், பால் பேக்கட்டையும் எடுத்து, பாலைக் காய்ச்சி ஆற்றி, ஒரு தம்ளரில் எடுத்துக்கொண்டு போனாள். பெரியவருக்குக் கொடுத்து, மருந்தும் சாப்பிடவைத்தாள்.

இத்தனையும் நடந்தது தெரியாமல் இன்னும் கலையாமல் இருந்தார்கள் இருவரும்.

திடீரென ஏதோ சத்தம். என்ன அது? யூகிக்கும்முன், தியானம் கலைந்து எழுந்தார்கள். இருவரின் மனதிலும் ஒரு நிம்மதி, நிறைவு, காற்றில் பறப்பதுபோன்று லேசானது சரீரம். ஒருவரையொருவர் பார்த்து புன்னகைத்தார்கள் இருவருமே.

அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் கண்கள், இவர்கள் எப்படி, எங்கிருந்து, தலைசாய்த்துப் பார்த்தாலும் அவர்களிருவரின் பார்வையைத் தொடர்ந்து தீர்க்கமாகப் பார்த்ததில், வீழ்ந்து வணங்கி சந்தோஷித்தார்கள். அப்போதுதான் நிதரிசனத்திற்கே வந்தார்கள் இருவரும்.

அவருக்கு மருந்து, மாத்திரை தந்திருப்பாள். ஆகாரம், ம்..... தந்திருப்பாள்.... ஆமாம், அந்த வேளையில் நான் இவர்களிருவரையும் தானே என் மனதில் நிறைத்தேன். நிச்சயமாக, இவர்களிருவரும் என் கணவரின் வயிற்றையும் நிரப்பியிருப்பார்கள். அதனால் எனக்கு எந்த சஞ்சலமுமில்லை.

வீழ்ந்து வணங்கி மனநிறைவோடு எழுந்தாள் அந்த முதியவள்.

⇛⇛⇛⇛⇛

கணவரருகில் சென்று நின்றவளைப் பார்த்து, அவரும், நர்சும் வியந்தேபோனார்கள்.

‘‘பாகீ..... பாகீ.... எப்டி இவ்வளவு சந்தோஷமா, பிரகாசமா, தேஜஸா இருக்கே? உனக்குள்ளே என்னவோ பூந்துனுடுத்துடி..... புதுசா.... இப்பத்தான் உன்னை பார்க்கிறேன்.... ம்.... ஹூம்..... நம்பவே.... முடியலே..... என்ன நடந்தது பாகீ?..... எனக்குச் சொல்லத் தெரியலே...... ஆனா, இப்ப நீ பழைய பாகீ இல்லே.... இல்லே.... ஆமாம்.... நீ, இப்பத்தான் புதூ.....சா வந்த மாதிரி தோண்றது.... என்ன மாயம்டி நடந்தது? தாங்கலே...... நம்ப முடியலே...... ஆமாம்.... பாகீ..... இப்ப...... எனக்கும்..... எனக்கும் உள்ளுக்குள்ளே..... ஒரு தைர்யம்.... ஆமாம்மா..... தைர்யம் பூந்துனுடுத்து..... ஆமாம்..... வாயேன்.... கிட்ட வா...... உன்னோட கையைக் காமிம்மா, நான் கண்ணுல ஒத்திக்கணும், வாம்மா’’.

‘‘என்ன நீங்க.... என்னென்னமோ பேசறேளே..... எனக்கு பயமா இருக்கே..... மீனா.... நீ பாரேன்..... இல்லேன்னா டாக்டருக்குப் போன் போடலாமா?.... பாரும்மா.... மீனா.....’’ கலவரம் தெரிந்தது முதியவளின் முகத்தில்.

மீனா அவளின் அருகில் வந்தாள். ஆதரவோடு அணைத்து நாற்காலியில் உட்காரவைத்தாள்.

‘‘அம்மா.... அவர் சொல்றதுல பொய்யேயில்லே. அத்தனையும் நிஜம்மா. அவருக்கு ஒண்ணும் ஆகலே. அவர் உண்மையைத்தாம்மா சொன்னார். ஆமாம்மா.... உங்க முகத்துல அதென்ன அப்டியொரு பிரகாசம் களைகட்டியிருக்கு? நம்பவே முடியலேம்மா! ஆஸ்பத்திரியில இருந்தவங்களா நீங்கன்னு தோணுதும்மா. ஆஸ்பத்திரியில நீங்க வாடின முகத்தோட, பயம் உங்க முகத்துல அப்பியிருந்ததும்மா. ஆனா, இப்ப.... இப்ப.... நிஜமாத்தாம்மா சொல்றேன். பெரியவர் சொல்றதுல தப்பேயில்லே. அவ்வளவு.... அவ்வளவு.....’’ மேலே பேச முடியாமல் திணறியவளின் கண்களில் நீர் தெறித்தது. உணர்ச்சிவசப்பட்டு, முதியவளின் கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். முதியவளின் கரங்கள் நனைந்தது.

‘‘எனக்கும், எனக்கும்தான் ஒண்ணுமே புரியலே. நீங்க ரெண்டு பேரும் சொன்னதுபோல எனக்குள்ளேயும் ஏதோ ஒண்ணு நடந்து



இருக்காப்பலயிருக்குதான். என் மனசும் இப்ப எந்தவிதமான பயமோ, பதட்டமோயில்லாம அமைதியாயிருக்குங்கறதை உணர்றேன். நிச்சயமா நான் எதுவுமே தெரியாம, வணங்கிய தெய்வங்கள்தான் எனக்குள்ள இத்தனை மாற்றத்தைத் தந்திருக்கா. நிச்சயமா சொல்லுவேன், உங்களுக்கு ஒண்ணுமே ஆகாதுன்னா. என்னமோ சின்ன அடிதானே, சரியாயிடும். ஆகாரம் எடுத்துண்டேளா? மாத்திரை சாப்பிட்டேளா?’’

‘‘ஆச்சு, நீ சாப்டியாம்மா? இந்த மீனாப்பொண்ணும் ஒண்ணும் சாப்பிடலே, பாவம்மா. நான் பிரெட்டும், பாலும் சாப்ட்டு, மருந்தும் எடுத்துண்டாச்சு. வலியேயில்லேம்மா. மீனாப்பொண்ணு என்னை, பெத்த தகப்பன்போல பார்த்துக்கறா. போங்கோ, போய் சாப்பிடுங்கோ....’’.

‘‘அப்பா.... எப்டியிருக்கீங்க? வலி பரவாயில்லையா?’’ ‘‘மீனா கொடுக்க வேண்டிய மருந்தெல்லாம் கொடுத்துட்டியா?’’

‘‘பிரெட்டும், பாலும் கொடுத்து, மருந்தும் தந்தாச்சு. ஒரு மணி நேரம் கழிச்சு சாப்பாடு தந்தா போதும் சார். டோண்ட் வொர்ரி. ஹீ ஈஸ் ஆல்ரைட் நௌ சார்’’.

‘‘மீனா, நீ சாப்டியாம்மா. வா, அம்மாவும் இன்னும் சாப்பிடலே. அப்பா, நாங்க சாப்டுட்டு, கொஞ்ச நேரம் கழிச்சு ஆகாரம் தரலாமா? இல்லே இப்ப தரவா’’ கௌதம் கேட்க, அவரும் பிறகு சாப்பிடுவதாகக் கூறியதால், மூவரும் டைனிங் டேபிளில் அமர்ந்தார்கள். டிபன் கேரியரில் ஹோட்டலிலிருந்து வரவழைத்த சாப்பாடு இருந்தது. தட்டு வைத்து பரிமாறிக்கொண்டார்கள்.

‘‘ஏம்பா, வீட்டுல ஊருக்குப் போயிருக்காங்களா? ஓட்டல்லருந்து சாப்பாடு வரவழைச்சிருக்கே....’’.

‘‘அம்மா! சாப்பிடுங்கம்மா. மத்ததையெல்லாம் அப்புறமா பேசிக்கலாம், சாப்பிடுங்க. அம்மா! உங்க பேரும், அப்பா பேரும் என்னம்மா? ஆஸ்பிடலுக்குச் சொல்லணும்மா’’.

‘‘அவர் பேரு நாகராஜன். என் பேரு பாகீரதிப்பா...’’. மேலே எதுவும் கூறவில்லை. கௌதமுக்கும் கேட்கத் தயக்கமாயிருந்தது.

சாப்பாடு ஆனபின் எல்லாவற்றையும் சிறிய பாத்திரங்களில் போட்டு, டிபன் கேரியரை நன்கு அலம்பிக் கவிழ்த்தபின், டேபிளையும் சுத்தம் பண்ணச் சென்றபோது, சுத்தப்படுத்தப்பட்டிருந்தது.

''அம்மா! நீங்க கொஞ்ச நாள் ரெஸ்டாயிருங்க. அப்பாவை மட்டும் பார்த்துக்குங்கம்மா. அப்புறமா மிச்ச வேலை செய்யலாம்மா''.

''இல்லேப்பா கௌதம். நான் அப்பாவையும் பார்த்துண்டு, உங்க வீட்டம்மா வர்ர வரை அந்த வேலைகளையும் செய்யறேன். அதுக்கப்புறமா..... அதுக்கப்புறமா....'' மேலே பேச முடியாமல் திணறிப்போனாள் பாகீரதி.

''அம்மா! மேலே ஒண்ணும் பேச வேண்டாம்மா. உங்க இடம் இங்கேதான். நான், நீங்க பெறாத பிள்ளை. எனக்கு அப்பா, அம்மா எல்லாமே நீங்கதான். என்னைப் பெத்தவங்க (தயங்கினான்), எனக்குக் கும்பிடற தெய்வமாயிருக்கிற அப்பாவும், அம்மாவும், அதோ அவங்கதான். அவங்க.... அவங்களேதான்'' மேலே பேச்சே வாராமல் உணர்ச்சிக்குவியலில் ஸ்ரீ அரவிந்தர், அன்னையிடம் சென்று நின்ற கௌதமின் மனம் நெகிழ்ந்து, உருகி, கண் இமைகள் மூட மெய் மறந்தேபோனான்.

''இவங்க... இவங்கதான் உங்கப்பாம்மாவா? ம்.... என்ன தேஜஸ், என்ன கருணை..... என் மனசுக்குள்ளே பூந்து என்னென்னமோ.... ஆமாம்பா.... சொல்லவே முடியலே.... ஆனா, அனுபவிக்கிறேம்பா.... ரொம்ப சந்தோஷம். இப்பேர்ப்பட்ட தெய்வ அமைப்போட இருக்கிறவங்களுக்குப் பொறந்த நீ மட்டும் எப்டிப்பா.... வேறே.... மாதிரி நடக்க முடியும்? ரொம்ப சந்தோஷம்பா.... பெத்தவங்களை தெய்வமா நினைச்சு வணங்கற உனக்கு ஒரு குறையும் வாராதுப்பா.... வரவே.... வாராது.....'' பாகீரதி கூறி முடிப்பதற்குள் கௌதம் அவள் கால்களில் வீழ்ந்து கதறி அழ ஆரம்பித்துவிட்டான்.

திகைத்தேபோனார்கள் மூவரும். அதிர்ந்தாள் பாகீரதி. ஏதோ தவறாகப் பேசிவிட்டோம்என்பது மட்டும் புரிந்தேபோனது. எது? புரியவில்லை, தெரியவில்லை. தெளிவில்லாத மனதை அடக்கியபடி, கௌதமைத் தன் கரங்களால் பிடித்து எழுப்பினாள். குழந்தையாய்



அவனைத் தன் தோளில் சாய்த்துக்கொண்டாள். முதுகை ஆதரவாய் தடவிக்கொடுத்தாள்.

''அழாதேப்பா.... ம்... ஹூம்... அழவே கூடாது. இந்த வயசுல நீ தைர்யமாயிருக்கணுமே தவிர அழலாமோப்பா.... அழக்கூடாது கண்ணா. அம்மா சொல்றேனோன்னோ.... எழுந்திரு... கண்ணைத் தொடச்சுக்கோ. அப்பாவுக்கும், அம்மாவுக்கும் வயசாயிடுத்து, பகவான் கூப்டுனுட்டார். என்ன பண்றது, சொல்லு? இன்னும் சின்னக் குழந்தையாட்டமா.... எழுந்திருப்பா கௌதம்.... எழுந்திரு....''.

பாகீரதி மேலே பேசும்முன், ''அம்மா! அம்மா! என்னோட அப்பா, அம்மாவை நானே சாகடிச்சுட்டேம்மா.... சாகடிச்சுட்டேன். இவா.... இவா.... ரெண்டு பேருமே, மிருகமாயிருந்த என்னை மனுஷனா மாத்தினவாம்மா. அதுக்குள்ளே என்னென்னமோ நடந்துடுத்து. இப்ப... நான் உணர்ந்துனுட்டேன்... ஆனா, நடந்ததை எப்படி மாத்த முடியும்? போன உயிரைக் கொண்டுவர முடியுமா? அதுதான் பிராயச்சித்தம் தேடறேன். ஆமாம்மா.... இவா ரெண்டு பேரும் உலகத்துக்கே தாய், தந்தையா இருக்கிறவாம்மா. ஆமாம்மா...''.

''என்ன சொல்றேப்பா கௌதம்? ஒண்ணுமே புரியலையே. ஆனா.... ஆனா.... எனக்குள்ள கொஞ்சம் சந்தேகமாயிருந்தது. அவர் சன்னியாசி போல இருக்கார். அவங்களும்... என்னமோ... சரியா புரியலேப்பா''.

''அம்மா, அவங்க ரெண்டு பேரும் கணவன், மனைவி இல்லே. அதை மொதல்ல தெரிஞ்சுக்குங்க. எத்தனையோ பேர் தவறா நினைச்சுட்டுப் பேசறாங்க. அம்மா! அவங்க வெளிநாட்டு, 'மிரா' என்கிற பிரெஞ்சு பெண்மணி. அவர், ஸ்ரீ அரவிந்தர் என்கிற மகான். நமக்கெல்லாம் பகவான்மா. அவர் வங்காளத்துக்காரர். ஏழு வயசுல, அவங்க அப்பா வெளிநாட்டுக்குப் படிக்க அனுப்பிச்சார். நல்லா படிச்சவர். தம் தாய்நாட்டுச் சுதந்திரத்துக்காகப் பாடுபட்டு, சிறைத் தண்டனை அனுபவித்தவர். அவர் சுதந்திரப் போராட்ட வீரர். பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த பாண்டிச்சேரியில் வந்து தங்கினார். அங்கேயே ஆன்மீகத் துறையில் ஈடுபட்டு, மகான் ஆனார். ஆன்மீகத்தை நாடி

வந்த (அன்னை) மிராவும் இவருடைய ஆன்மீகம் மனதை ஊடுருவ, பாண்டியிலேயே தங்கி, எல்லோருக்கும் 'அன்னை'யானார். ஸ்ரீ அரவிந்தர் 'பகவான்' ஆனார். அம்மா! நிறைய புத்தகங்கள் இவங்களைப் புரிஞ்சுக்கும்படியாயிருக்கு. அவங்க கோட்பாடுகளையும் தெரிஞ்சுக்கலாம். முடிஞ்சவரை படியுங்கம்மா. இதோ... இந்த ஷெல்புல இருக்கிறது எல்லாமே.... அவங்களைப் பத்தின புத்தகங்கள்தான். இதுக்கு மேலே எனக்கு அவ்வளவா சொல்லத் தெரியலே. ஆனா, மனசு பூரா.... அவங்கதாம்மாயிருக்காங்க. நான் செய்யக்கூடாத தவற்றை செஞ்சுட்டு, தினம் தினம் இவங்ககிட்ட மன்னிப்புக் கேட்கிறேம்மா..... அம்மா, நீங்களும், அப்பாவும் எங்கேயும் போக வேண்டாம்மா. என் கூடவேயிருந்துடுங்க. எனக்கும் யாருமில்லே. என் கூடவேயிருங்கம்மா... சரியாம்மா... சரின்னு சொல்லுங்களேன்.... சொல்லுங்கம்மா....'' கௌதமின் வேண்டுகோள் அவன் இதயத்தில் இருந்து களங்கமில்லாமல் வருவது தெரிந்தது, புரிந்தது.

பேச்சு எழாமல், தலையையசைத்து சம்மதம் தெரிவித்த பாகீரதியின் கண்கள் நன்றியுடன் ஸ்ரீ அரவிந்தரையும், அன்னையை-யும் பார்த்தன.

⇛⇛⇛⇛⇛

நாட்கள் கடந்தன. நாகராஜன் உடல்நலம் நன்றாகத் தேறியது. அடிபட்ட இடம் தெரியாமல் வெகுவேகமாக சரியாகியது. மீனாவும், அவர்களிருவரையும் வணங்கி, கௌதமிடம் கூறிவிட்டு, மீண்டும் ஆஸ்பிடலுக்குச் சென்றுவிட்டாள்.

பாகீரதியும், நாகராஜனும் தன்னுடனேயேயிருக்க வேண்டுமென்ற கோரிக்கையை கௌதம் மனமுருகிக் கேட்டதில், இருவரும் ஒத்துக் கொண்டார்கள். அவர்களுக்கும் போக்கிடம் இல்லையே.

ஆனால், பாகீரதி ஒரே பேச்சில் சொல்லிவிட்டாள்.

''கௌதம், இனிமே இந்த ஓட்டல் சாப்பாடு வேண்டாம்பா. வீட்டுல வேலைக்காரியிருக்கா, தோட்டக்காரன் இருக்கான், சமையல் நான் செய்யறேன்பா. கௌதம், காய்கறி வாங்கிவந்து சமைக்கக்கூடிய



அளவுக்கு எனக்குத் தெம்பிருக்கு. இதை மட்டும் நீ 'சரி'ன்னு சொன்னா போதும், எங்களுக்கும் சந்தோஷமாயிருக்கும். எங்க மனசுலயும் தாழ்வு மனப்பான்மையிருக்காது, சரியாப்பா....''.

வினாடியும் தாமதியாமல் சந்தோஷத்தோடு 'சரி' என ஆமோதித்த கௌதமை நன்றியோடு பார்த்தார்கள் நாகராஜனும், பாகீரதியும்.

இத்தனை நல்லவனாகயிருக்கும் இவனா தன் பெற்றோர்களை வருத்தினான்? நம்ப முடியலையே.... சரி.... எதுவானாலும் என்ன? நாம் எதையும் கேட்கக்கூடாது. ஒவ்வொருத்தரின் அந்தரங்கத்திலும் எத்தனையோ மேடைகள். அந்த மேடைகளில் எத்தனையோ காட்சிகள். அவையெல்லாம் வெளியுலகத்திற்குப் போட்டுக்காட்ட முடியாத நாடகங்கள். அவைகள் அரங்கத்திற்கும் வாராது. அந்தரங்கத்திற்கே உரியது. உள்ளே எந்த அனுமதியுமில்லாமல் நுழைந்து பார்க்கக் கூடாது. அது மிகப்பெரிய தவறு. ஆனால், கௌதமின் மனதிற்குள் இருக்கும் சோகங்களைச் சமனப்படுத்தியவர்கள் இவர்கள், தேவதூதர்கள். மனித உருவில், மனிதர்களுக்காகவே.... அவர்களின் சங்கடங்களைத் தீர்க்க வந்தவர்கள். அதற்கான வழிமுறைகளைச் சொல்ல வந்தவர்கள். இந்தப் பூவுலகில் அவதரித்தவர்கள். இவர்களை நாம் விடக்கூடாது. படரும் கொடிகளைப்போல் இவர்களைப் பற்றிக்கொள்ள வேண்டும். கொழுகொம்பாகப் பற்றிக்கொண்டு, நம் இச்சையின்றி, அவர்கள் இச்சைக்குப் பணிந்து, அவர்கள் வழிநடத்த, அந்த வழியில் நாம் செல்ல வேண்டும். இதுதான் இனி நாம் செய்ய வேண்டியது.....

''அம்மா... என்னம்மா.... ஒரேயடியா மௌனமாயிட்டீங்க.... ஏதாவது சொல்லணுமா? இல்லே கேட்கணுமா? சொல்லுங்கம்மா....'' கௌதம் கேட்கவும், பாகீரதி தலையசைத்தாள்.

''கௌதம், எப்பேர்ப்பட்ட இடத்துல நாங்க ரெண்டு பேரும் வந்து சேர்ந்திருக்கோம்னு நினைச்சு, நினைச்சு மனசுக்குள்ளேயே பொங்கிப்போறேம்பா. எத்தனையோ தெய்வங்களைக் கதறிக் கதறிக் கூப்பிட்டோம். ம்... ஹூம்... யார் காதிலும் விழுந்ததாத் தெரியலே.

போக இடமும் தெரியலே, வழியும் புரியலே.... அதனால சோகத்தோட வரப்பதான் உன் காருல மோதினது. உன்னோட அறிமுகம் ஆனதே ஒரு சின்ன விபத்துலதான்னாலும், எவ்வளவு பெரிய பாக்கியத்தை தெய்வமாயிருக்கிற ஸ்ரீ அரவிந்தரும், அன்னையும் செஞ்சிருக்கா. அவங்க எங்களை ஆதரிக்கத்தான் இந்த விபத்து, கௌதம். அதை நினைச்சு, நினைச்சுத்தான் பிரமிச்சுப்போறேன். வேறே ஒண்ணுமில்லேப்பா''.

''ஆமாம்மா, இந்த கலிகாலத்துல எத்தனையோ தவறான வழிகள் மக்களுக்கு, அதாவது என்னைப்போல எத்தனையோ பேருக்கு நிறைய சந்தர்ப்பங்களைத் தருதும்மா. அந்தக் களைகளை இந்த உலகத்துல இருக்கிற மனிதப்பயிரிலிருந்து களைய வந்திருக்கிறவங்க, தெய்வங்கம்மா இவங்க. 'சரணாகதி'ன்னு அவங்க கால்கள்ள வீழ்ந்து நாம் கதறிக் கரைஞ்சாலே போதும்மா, பெத்த குழந்தை கீழே விழுந்து அடிபட்டா பதறி ஓடி வரத் தாயா.... பறந்தோடி வருவாங்கம்மா. உதாரணத்துக்கு, உங்க முன்னே நிற்கிற நானேதாம்மா; கொடுமைக்காரனா, பாவியாயிருந்த என்னை மனுஷனா மாத்தினது இவங்களேதான். எக்காரணம்கொண்டும் இவங்களை மட்டும் விடவேமாட்டேன்... விடவேமாட்டேன். அம்மா... இவங்க நிதரிசனமான தெய்வங்கள். அதுக்கு உதாரணமும் நானேதாம்மா. ஆமாம்மா, எனக்குத் தந்தையும், தாயாகவும் என்னோட ஒவ்வொரு நிமிஷத்துலேயும் வழிநடத்தறாங்க. அதனாலதான் உங்களை எனக்குக் காட்டித் தந்திருக்காங்க. இப்ப, இனிமே நீங்கதானேம்மா எனக்கு அப்பாவும், அம்மாவும். உங்களை இனிமே விட்டுப் பிரியவேமாட்டேம்மா.... மாட்டேன். கண்கண்ட தெய்வங்களாயிருக்கிற இவங்க, என் கண்களுக்குக் காட்டித் தந்தவங்க நீங்க. நான் அனாதைங்கற உணர்வே மனசுல துளிக்கூட இல்லாம எப்படி தீர்த்துட்டாங்க பார்த்தீங்களா.... அதுதாம்மா பகவானும், அன்னையும் செய்யும் அற்புதம்....''.

''சரிப்பா, ரொம்ப மனசுக்கு இதமாவும், நிறைஞ்சும் இருக்கு. இவங்களுக்குன்னு கோவில்போல ஏதாவது இருக்கா கௌதம்? இல்லே.... அவங்களோட.....'' மேலே என்ன கேட்பதுஎனத் தெரியாமல் நிறுத்தினாள் பேச்சை.



''கோவில்போல அபிஷேக ஆராதனையெல்லாமில்லேம்மா. தியான மையங்கள் இருக்கும்மா. அங்கே கூட்டுப்பிரார்த்தனையும், அன்னை, ஸ்ரீ அரவிந்தர் பற்றிய ஸ்பீச்சும் இருக்கும்மா. அப்பாவுக்குத் தெம்பு வரட்டும். நான் உங்க ரெண்டு பேரையுமே கூட்டிட்டுப் போறேன்மா. அந்த அமைதியும், சூழ்நிலையுமே நமக்குள்ளே என்னென்னமோ ஜாலங்கள் செய்யும்மா. நான் ஒண்ணும் சொல்லக்கூடாது. நீங்களே உணருவீங்கம்மா. சரி, அப்பாவுக்கு முடியும்னா நாளைக்குப் போயிட்டு வரலாம். அதுக்கப்புறமா வர ஒண்ணாந்தேதிக்கு மறுபடியும் போகலாம். சாயந்திரம் 'ஸ்பீச்சும்' இருக்கும். கேட்டுட்டு வரலாம், சரியாம்மா...''.

வார்த்தைக்கு வார்த்தை 'அம்மா, அம்மா' என்று அழைக்கும் கௌதமின் மனதிற்குள் புதைந்துகிடக்கும் அந்த துக்கத்தை, துயரத்தைக் கண்டிப்பாய் வெளிக்கொணர வேண்டும். அதிலிருந்து அவனை மீட்டு, நல்லபடி வாழவைக்க வேண்டும். இதற்கு அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் நமக்குத் துணையாயிருக்க இன்றிலிருந்து பிரார்த்திக்க வேண்டும்.

இதயத்தினுள் இந்தக் கோரிக்கையை உறுதிசெய்துகொண்டாள் பாகீரதி.

*தொடரும்....*

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

முன்னேற்றத்தின் தன்மையை அறியாதவன் பிறர் முன்னேற்றத்தைக் கண்டு பொறாமைப்படுவான். ஒருவருக்கு முன்னேற்றம் வந்தால், அது அனைவருக்கும் முன்னேற்றம் வருவதன் அறிகுறி. முன்னேற்றத்திற்கே வழி இல்லை என்ற நிலையில் ஒருவருக்கும் அது கிடைக்காது.

***எவருடைய முன்னேற்றமும், நமக்கு பேருதவி செய்யும்.***

## யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**77. அழைப்பு பாக்கியம்என அறிதல். நினைவே ஒரு பாக்கியம். ஆன்மீக நன்றியறிதல்.**

அன்னையை அறிதல் அதிர்ஷ்டம்.

அன்னையை அழைப்பது ஆன்மீக பாக்கியம். ஜீவனில் நன்றியில்லாமல் அன்னையை அழைக்க முடியாதுஎன்று இடைவிடாமல் அழைக்க முயன்றவர் அறிவார்.

சோவியத் யூனியனில் ஒவ்வொருவருக்கும் தினமும் ஒரு முட்டை கிடைக்கும் என்பதைக் கேட்டவர் 'இதென்ன பெரிசு' என்றார்.

அவர் வீட்டில் 8 பேருண்டு. அடிக்கடி முட்டை சாப்பிடுபவர். முட்டை சாப்பிடுவதும், தினமும் ஒரு முட்டை சாப்பிடுவதற்கும் உள்ள வேறுபாடு பெரியது.

8 பேர் தினமும் ஒரு முட்டை சாப்பிட மாதம் 240 முட்டை வாங்க வேண்டும். அவர் அந்த மாதம் வாங்கியது 10 முட்டை. தினமும் ஒருவருக்கு 1/24 பங்கு முட்டையுண்டு.

அடிக்கடி, மாதம் ஒரு முறை, அழைப்பில் உட்காருபவர் இல்லை, குறைவு. உட்கார்ந்தால் தூங்குபவர் பலர். ஒரு சிலர் குறட்டையும் விடுவர்.

தினமும் 1 மணி நேரம் அன்னையை அழைப்பவர் டெபுடி கலெக்டரானால், 6 மாத முடிவில் அவர் அகில இந்திய ஸ்தாபனத் தலைவராவார்.

நான் எழுதும் உதாரணமெல்லாம் வசதி பெறுபவை.

அறிவு வளர்வது, ஆதரவு பெருகுவது, மனம் அமைதியடைவது, பிரபலம் பெறுவது ஆகியவை வசதியுடன் ஒப்பிட முடியாத உயரத்திலுள்ளவை. அன்னையை அறியாமல் அதன் சாரலில் வந்த இனிய பழக்கமுள்ள ஆபீசர் சில ஆண்டுகளில் அகில இந்தியப் புகழ் பெற்றார், பல ஆண்டுகளில் உலகப்புகழ் பெற்றார். இவை அன்னையின் சூழலால் வந்தவைஎனவும் அவர் அறியமாட்டார்.

வாய்விட்டு அழைத்து, அதை மனத்தால் சொல்லி, அழைப்பை



நெஞ்சுக்குக் கொண்டுபோய், அங்கிருந்து நெஞ்சுக்குப்பின்னால் கொண்டு போவதில் ஒவ்வொரு கட்டமும் எப்படி முக்கியம், சிரமம் எனத் தெரியும். ஒரு வாழ்நாளில் ஒரு முறையும் இவை சாதிக்கக் கூடியவையல்ல.

யோகத்தில் நாட்டமுள்ளவர் அறியக்கூடிய பாதையிது.

வாயால் அழைப்பதே பாக்கியம்.

அதையும் தொடர்ந்து செய்ய முடியாது.

ஒரு நாளில் சில மணி நேரம் அழைத்தால் பிறகு 1 மாதம் மறந்து போகும்.

பாக்கியத்தைப் பணமாக எண்ணாமல், பாக்கியமாகக் கருதும் மனமிருந்தால் ஒவ்வொரு முறையும் அழைக்கும்பொழுது அது 'பாக்கியம்' எனக் கூறும்.

பாக்கியம்என்று அறிவிப்பது அறிவு.

அமிர்தம்என உணர்வது உயிர்.

உணர்ந்து பேசமுடியாத உடல் புல்லரிக்கும்.

உடலின் புல்லரிப்பு அங்கு உயிரின் புன்னகை.

நினைவு, உணர்வு, உடல் உணர்வு என்பவை மனம்.

உயிர், உடல் அன்னையால் தீண்டப்பெறுவதாகும்.

**78. எந்தக் காரியத்தை எவருக்குச் செய்தால் வழிவிடும்என அறிதல்.**

பெரியவருக்கு நமஸ்காரம் செய்யத் தடையை அகற்று.

தியானத்தில் ஒரு சில ஆங்கிலேயர் இருந்தனர். நாம் குருவுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வதால், அவர்களும் தாமாகவே முன்வந்து செய்தனர்.

'நமஸ்காரம்' என் தலையில் கத்தி ஊடுருவுவதுபோலிருக்கிறது என்றார் அந்த மேல்நாட்டார். அவர்கட்குப் பழக்கமில்லை. ஒரு பெரிய ஆத்மாவுக்கு நமஸ்காரம் செய்யும் பக்குவமற்ற ஆத்மா அவர்.

தனக்கு வரவேண்டிய பெரிய பிரமோஷனில் பெருங்கேள்வி எழுந்து, 6 மாதமாகத் தடையாயிருப்பவர் 6 மாதம் முன் வீட்டில் உள்ள அண்ணன் மகனுக்கு வாங்கிய தீபாவளித் துணியை அவனைத் தண்டிக்க வேண்டி கொடுக்காமல் வைத்திருக்கிறார்என்று அறிவதில்லை.

அதைக் கொடுக்கும் நிர்ப்பந்தம் எழுந்தது. அன்றே பிரமோஷன் கிடைத்தது.

நம்சுபாவப்படி நாம் பல காரியங்களைச் செய்கிறோம், பல்வேறு காரியங்களைச் செய்ய மறுக்கிறோம். நாம் செய்த, செய்யாத ஒவ்வொரு காரியத்திற்கு நேரான தொடர்புடைய மற்றொரு காரியம் உண்டு என நாம் அறிவதில்லை.

கவனித்தால் பெரும்பாலும் விளங்கும்.

யோசனை செய்தால் மேலும் விளங்கும்.

சமர்ப்பணம் செய்து, யோசனையுடன் கவனித்தால் அனைத்தும் விளங்கும்.

ஒரு பெரிய சிக்கலில் அண்ணனுக்குத் தம்பி தோற்க வேண்டும்என்ற ‘நல்ல’ எண்ணம். சிக்கல், பெருஞ்சிக்கலாகி, உடைந்து, மீண்டும் சிக்கல் ஆயிற்று. 11 வருஷம் கழித்து ஒரு நாள் தம்பி அண்ணனை நோக்கி, “சற்று உதவினால் நல்லது” என்றார். 11 வருஷமாக அண்ணன் மனநிலையை அறிந்தவர் தற்சமயம் அவர் மனம் சற்று மாறுபட்டிருப்பதை அறிந்து கேட்டார். அண்ணன் இசைந்தார். மறுநாள் சிக்கல் அவிழ்ந்து, எழுதி, கையெழுத்துப் போட்டு முடித்தனர்.

நம்வீட்டு நிலைமையை “எங்கள் குடும்பம்” தாயார் அறிவதுபோல் கவனித்தால்,

❀ எந்தப் பிரச்சினைக்குரிய முடிச்சும் தெரியும்.

❀ எந்த வாய்ப்புக்குரிய வாயிலும் தெரியும்.

பக்தியிருந்தும் பழக்கத்தால் நமஸ்காரம் செய்ய உடல் தயங்கினால், தயக்கம் விலகி நமஸ்காரம் செய்தால், தடை விலகும், வாய்ப்பு பலிக்கும்.

✡ கவனிப்பது முக்கியம்.

✡ தொடர்பை அறிவது அதைவிட முக்கியம்.

✡ இல்லாத தொடர்பைக் கற்பனை செய்பவர் பலனைக் கண்டு நிலையை அறிய வேண்டும்.

✡ பகுத்தறிவு பேசுபவர் இதுபோல் கவனித்தால் ‘அவர்கள் பகுத்தறிவுக்-கும்’ உலகில் தேவைப்பட்ட அறிவுக்கும் உள்ள தூரத்தைக் காண்பர்.

தொடரும்....

❀ ❀ ❀





**எல்லா முறைகளையும் முயன்றேன்; பலனில்லை.**
**உடலில் ஏதோ ஒன்று ஆன்மீக சக்தியை ஏற்கவில்லை.**

✡ **முறைகட்குப் பலன் உண்டு. ஆனால் முடிவான பலன் மூலத்திற்கே உண்டு.**

✡ **வாழ்வும், யோகமும் ஓர் அம்சத்தில் ஒன்றுபோன்றவை.**

✡ **மகனுக்குத் தந்தை சொத்து தருகிறார்; புத்திமதி சொல்கிறார்; அவனுக்கேயுள்ள சுபாவம் உண்டு.**

**பிதிராஜ்யம் பெரியது. ஆனால் பிரகாசம் பெறாது.**

**புத்திமதியை ஏற்பது சொத்தைவிடப் பெரியது. ஆனால் சொந்தம் ஆகாது.**

**நெருக்கடி வரும்பொழுது பிதிராஜ்யமோ, புத்திமதியோ பயன்படாது.**

**சுபாவம் வெளிப்பட்டுச் செயல்படும். அதுவே நிலையானது.**

✡ **மோட்சத்தை நாடும் தவம் நிஷ்டைக்குப் பலிக்கும்.**

**பூரணயோகம் மோட்சத்தை நாடுவதில்லை.**

**மோட்ச லோகத்தை உலகுக்குக் கொண்டுவரும் யோகம்.**

**எல்லோரும் இந்நாட்டு மன்னராகும் யோகம் பூரணயோகம்.**

**அதனால் இங்கு முறைகளுக்கு முக்கியத்துவமில்லை.**

இருந்தாலும், மனம், உயிரைப் பொருத்தவரை முறைகள் ஓரளவு பயன்படும்.

உடல் அவைபோல் செயல்படாது; சுபாவத்தை வலியுறுத்தும்.

"என் ஜபம் சாயவில்லை" என்பது உடலைப் பொருத்தவரை உள்ளது.

சுபாவம் மாறினால், மூலவன் மூலத்திலிருந்து வந்து உடலில் செயல்பட்டால், உடல் அசையும்.

அன்னையின் யோகம் அந்த நிலைக்குப் போனபொழுது எந்த முறையும் பலன் தரவில்லை. உடலில் ஒன்று எதிர்ப்பு தெரிவிக்கிறது என்றார்.

மனம் குழப்பமாக இருந்தால் அன்னையை அரை மணி நேரம் அழைத்தால் தெளியும்.

கவலை நம்மை ஆக்ரமித்தால் 1 நாள் அழைப்பு கவலையை சந்தோஷமாக மாற்றும்.

உடல் உபாதைகள், தலைவலி, உளறல், சோர்வு, வயிற்றுவலியும் அதுபோல் மறையும். அதைக் கடந்த வியாதிகள் உண்டு. அவை அழைப்பு, பிரார்த்தனைக்குப் பலன் தாரா. அதன் காரணத்தைக் கண்டு விலக்கியபின் பிரார்த்தனை பலிக்கும். யோகம் அதையும் கடந்தது. அங்கு அதிகபட்ச எதிர்ப்பு உடலிலிருந்து எழும்.

❀❀❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Puducherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Puducherry-11 on behalf of The Mother's Service Society, Puducherry-11.
Editor: N. Asokan

## மார்க்கட் தரும் உபரி இலாபம்

சீசனுக்குரிய சரக்கு பல. உபரியானால் உற்பத்தி செய்பவன் வியாபாரியை நாடவேண்டும். கிராக்கியானால், வியாபாரி நம்மைத் தேடி வருவார். ஒருவர் சுமார் ஒரு லட்சம் சரக்கு ஒன்றை உற்பத்தி செய்தார். கிராக்கியாக விற்றது. அவருக்கு மார்க்கட்டில் யார் வாங்குகிறார்கள்என்ற விபரம் தெரிய வந்தது. விநியோகத்திற்கும் ஓர் ஏற்பாடு செய்தார். இதே சமயம் சீசன் இல்லாதபொழுது எங்கெல்லாம் இந்தச் சரக்கு உற்பத்தியாகிறது எனவும் அவர் அறிந்தார். மார்க்கட்டில் 3 லட்சம் சரக்குக்கு கிராக்கியிருக்கிறது. இவரிடம் 1 லட்சம்தான் உற்பத்தி. சென்ற வருஷம் அவர் செய்த பல வேலைகளின் பலனாக 20 லட்ச ரூபாய் சம்பாதித்தார். மார்க்கட்டில் தேவைப்படும் உபரியான 2 லட்சம் சரக்கையும் இவரால் வாங்க முடியும். ஒரு சரக்கில் இவருக்கு 20 பைசா நிகரமாக நிற்கும். அதாவது தினமும் செலவு போக, இவரால் 40,000 சம்பாதிக்க முடியும் என்று கண்டார். அது வருஷத்தில் ஒரு கோடிக்கு மேலாகிறது என்பது இவரைத் திகைக்க வைத்தது.

- ✯ *வேலையைப் பொறுப்பாகச் செய்தால் வேலை உபரியைக் காட்டும்.*
- ✯ *மார்க்கட் தினமும் மாறக்கூடியது. குழந்தை போன்றது.*
  *கொண்டாடினால் நம்மை நோக்கி ஆவலாக வரும்.*
  *மார்க்கட் ஒருவரைக் கைதூக்கிவிட முடிவு செய்தால் அதற்கு முடிவே இல்லை.*
- ✯ *இது மார்க்கட்டின் தன்மை.*
- ✯ *வேலை பெரியது. மார்க்கட் அதனுள் பகுதி.*
- ✯ *வேலையை ஆர்வமாகச் செய்தால், வேலை தரும் பலன் பெரியது.*

❀❀❀

## புது உலகம்

தன் குறை தெரிந்தால் முன்னுக்கு வரலாம் என்பது வழக்கு. தன் நிறைவு தெரிந்தால் முன்னுக்கு வரலாம்என நான் நீண்ட நாளாகக் கூறுகிறேன். பிலிப்பைன்ஸ் நாட்டில் ஒருவர் மருவை எடுக்கும் மருந்து கண்டுபிடித்தார். அதை ஒரு கம்பனி 2000 கோடி ரூபாய்க்குக் கேட்டது. அவர் மறுத்துவிட்டார். அதைவிட அதிகமாகச் சம்பாதித்துவிட்டார். அதன் விலை 7000 ரூபாய், 5 மருக்களை எடுக்க உதவும். அதை ஒருவர் வாங்கினார். முழுப்பலன் கிடைத்தது. அடுத்தவரிடம் கூறினார். அவர் ரூ.30/- ஒரு பாட்டில் மருந்து வாங்கி வந்தார். அது 10 மருவுக்குப் போதும். அதற்கும் முழுப்பலன் இருக்கிறது. மார்க்கட்டில் ஒரே வேலையை 7000 ரூபாயிலும், 30 ரூபாயிலும் செய்து முடிக்கலாம்.

**பரம்பரையாக இது மார்க்கட்டின் இரகஸ்யம்.**

- ✯ *ரூ.**3000**/-க்கு விற்கும் மரத்தை ஒரு சிற்றூரில் ரூ.**2,200**/-க்கு ஒருவர் வாங்கினார்.*
- ✯ *பெரும்பாடுபட்டு ரூ.**96,000**/-க்கு பேரம் பேசி முடித்த வேலையை, அவர் பார்ட்னர் ரூ.**36,000**/-க்கு முடித்தார்.*
- ✯ *ஊரில் நிலம் **15** இலட்சம் ரூபாய் ஓர் ஏக்கர்என விற்பது தெரியாமல் ஒரு விவசாயி ஓர் ஏக்கர் நிலத்தை ரூ.**25,000**/-க்கு விலை பேசி முடித்தார்.*

ஒரு கம்பனி பொருள்கள் வாங்குவதில் ஆராய முயன்றால், இது போன்ற விஷயம் வெளிவரும்.

- ✯ *இது மார்க்கட் திறமைக்குத் தரும் வாய்ப்பு.*
- ✯ *வாழ்வைக் கூர்ந்து ஆராய்பவருக்கு இதுபோன்ற பெரிய வாய்ப்புகளுண்டு.*
- ✯ *யோகசக்தி வாழ்வில் வேலை செய்தால், நம் வேலைகள் அனைத்தும் வாய்ப்பாகும்.*

❀❀❀

March 2008 Jiviyam 13 Malar 11
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/06-08
Price: Rs.5/- WPP No.45/06-08

புதிய வெளியீடு

கர்மயோகியின்

எங்கள் குடும்பம் (பாகம் 2) ரூ.250/-

உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம் ரூ.100/-

யோக வாழ்க்கை விளக்கம் IV ரூ.150/-

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

லைப் டிவைன் விரிவுரைகள்

*தமிழாக்கம்:* என். அசோகன் ரூ.100/-

LECTURES ON SRI AUROBINDO'S THE LIFE DIVINE

Garry Jacobs ரூ.150/-

SATYA JYOTHI

(CONCISE TRUISMS)

N.Asokan ரூ.200/-

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு, புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2214231

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை-600 035.
✆: (044)-24347191